சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone : No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 41-ம் இலக்கம் |
|---|---|---|

## பரிசுத்த ஸ்தானமும் வத்திக்கானும்

சாதாரண பாவனையிலே பரிசுத்தஸ்தானமும், வத்திக்கானும் என்றபதங்கள் பலமுறைகளிலும் ஒன்றுக்கொன்று வேறுபாடில்லாதன என்றமுறையிலேயே வழங்கப்படுகின்றன. ஆயினும், பரிசுத்தஸ்தானமும், வத்திக்கானும் வேறு வேறானவைகளே. பாப்பரசரும், கத்தோலிக்க திருச்சபையின் அரசாங்கயந்திரம் உருவாகும் பல்வேறு திருச்சங்கங்களும் ஒருங்குசேர்ந்தது தான் பரிசுத்தஸ்தானம் எனப்படுவது. அவ்வாறாக, பரிசுத்தஸ்தானம்என்பது, அரசியற்றுறையிலோ அன்றேல் இராச்சிய பரிபாலன துறையிலோ சொல்லளவில் ஓர்இராச்சியத்தைக் கொண்டதல்ல. பரிசுத்தஸ்தானத்தின் பணிமுழுவதும் சமயசம்பந்தமானதே. அதாவது திருச்சபையின் தொண்டுகளைத் துரிதமாக நடத்துவதே.

பரிசுத்தஸ்தானம் தனக்கு விதிக்கப்பட்ட கடமையை நிறைவேற்றுவதிலே அதற்குப் பூரண சுயாதீனமும், சுதந்திரமும் அளித்து உறுதிப்படுத்துமுகமாக இத்தாலிய அரசாங்கத்துடன் செய்துகொண்ட லத்தறன் உடன்படிக்கையாலே 1929-ம்ஆண்டு மாசி மாதம் 11-ந்திகதியன்று வத்திக்கான் இராச்சியம் ஸ்தாபிக்கப்படலாயிற்று. அப்போது பாப்பரசர் ஓர்சுதந்திர ஆட்சிஅதிகாரமுடையவர்போன்று பூரணலௌகிக இராஜத்துவம் அருளப்பெற்று அதனை ஏற்றுக்கொள்ளலாயினர். அதனால்அவர் இன்று 110 ஏக்கர் விஸ்தீரணமுடைய — அதாவது ஏறக்குறைய ஒருபட்டணத்தின் கார் பாக்கமளவு பரிமாணமுடைய தமதுசொந்த இராச்சியத்தின் தலைவராயிருந்து ஆட்சிபுரிந்து வருகின்றார். இந்த ஏற்பாடு எந்தலௌகிக அதிகாரத்தின்மட்டிலும் பாப்பரசரின் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றது.

பரிசுத்தஸ்தானம்வத்திக்கான் இராச்சியத்திலே இராசரீகம் நடத்திவருகின்றது. பரிசுத்தஸ்தானத்தின் தலைவரென்றமட்டிலே பாப்பரசர் இவ்விதமாக வத்திக்கான் இராச்சியத்தின் தலைவராயும் இருந்துவருகின்றார். இந்தமுறையிலே பாப்பரசர் இரட்டையான இராசரீகங்களைச் செலுத்திவருகின்றார். ஓர்சமயஸ்தாபனத்தின் தலைவரென்றமட்டிலே அவர் ஆத்மீகஅரசர். வத்திக்கான் இராச்சியத்தை ஆட்சி செய்கிறவரென்றமட்டிலே அவர் ஓர் லௌகிகஅரசர்.

நிற்க, பாப்பரசரின் தேர்தல் ஒன்றிலேவாக்களிக்கின்ற அமெரிக்ககருதினல்மார் தங்கள்பிரஜா உரிமையை இழக்கவேண்டுமென்பதுபற்றி ஐக்கிய அமெரிக்க தேசத்திலே சமீபகாலத்தில் ஓர் வாக்குவாதம் எழலாயிற்று. அப்படியான கருதினல்மார் ஐக்கிய அமெரிக்க சட்டத்தைமீறிப் பிற நாடுஒன்றின் அரசியற்தேர்தலில் வாக்களிக்கிறார்களென்று விவாதம் நடைபெறலாயிற்று. இவ்விதகருத்தைக் கொண்டுள்ளவர்கள் உள்ளபடியே ஓர்சமயஸ்தாபனமாக இருந்துவருகின்ற பரிசுத்த ஸ்தானத்துக்கும், ஓர் அரசியல்ஸ்தானமாய் இருந்துவருகின்ற வத்திக்கான் இராச்சியத்துக்குமிடையிலுள்ள வித்தியாசத்தை விளங்கிக்கொள்ளத் தவறுகின்றார்கள்.

பாப்பரசரின் தேர்தல்ஒன்றிலே அமெரிக்க கருதினல்மார் றோமான்கத்தோலிக்க திருச்சபையின் சமயதலைவருக்குத் தங்கள்வாக்குகளை அளித்தனர். இந்த அடிப்படையில்தான் 1878-ம் ஆண்டுக்கும், 1922-ம் ஆண்டுக்குமிடைப்பட்ட பாப்புமாரின் தேர்தல்களில் அமெரிக்க கருதினல்மார் கலந்துகொண்டனர். அத்தனை வருடங்களிலும் பாப்பானவர் "வத்திக்கானில் ஓர்மறியற்கார"ராக இருந்துவந்தார். பாப்பரசின் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டதன்மேல் பாப்புமாருக்கு உத்தரவாதம் அளிக்கின்ற 1871-ம்ஆண்டின் இத்தாலியசட்டத்தைப் பாப்புமார் அங்கீகரிக்காமல் ஞானஅதிகார எல்லையைமாத்திரம் கொண்டிருக்கும் நிலைமையில் இருந்துவந்தார்கள்.

## குடும்பத்தைக் காத்துவைக்கும் குடும்ப செபமாலை

"குடும்பசெபங்களில் பூரணமானது குடும்பசெபமாலையே" என்று பிரசித்திபெற்ற நாடகாசிரியையும், நூலாசிரியையும், இத்தாலிய அரசாங்கத்தினிடமாக முன்னாள் அமெரிக்கஸ்தானிகருமான கௌரவ கிளேயர் பூத் லூஸ்அம்மையார் கூறுகின்றார். அவர் மேலும்சொல்லுவதாவது: "செபம் அர்ச்சியசிட்டவர்களின் வாளாயுதமாய் இருக்குமானல் அது குடும்பத்தின் நங்கூரமாயும் இருக்கின்றது."

குடும்ப செபங்களிலெல்லாம் மகாசம்பூரணமானது செபமாலை. நாம் செபமாலைசொல்ல வேண்டுமென்று வேதாகமம் நமக்குச் சொல்வதில்லை. ஆனல், செபமாலைச் செபங்களை நாம்சொல்ல வேண்டுமென்று அது நமக்குச் சொல்லுகின்றது. "பரமண்டலங்களிலேஇருக்கிற எங்கள்பிதாவே"........ என்றசெபத்தைச் சொல்லும்படியாகத் திவ்விய யேசுதாமே நமக்குச்செப்பினார். இந்தச்செபத்தைச் செபமாலை ஆறுமுறை சொல்லுகின்றது. பிதாவையும், சுதனையும், தேற்றுகிறவரான தூயஆவியையும்பற்றித் திவ்வியயேசுதாமே நமக்குச் சொல்லுகின்றார். பிதா, சுதன், தூயஆவியாகிய தேவதிரீத்துவத்துக்கு "ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது" என்ற கிறீஸ்துவ உலகின் புராதனபாரம்பரியமான செபத்தையும் செபமாலை ஆறுமுறை சொல்லுகின்றது.

தேவதாயாரை மன்றாடும்படி வேதாகமம் விளக்கமாக நமக்குச் சொல்வதில்லை. ஆனல், தேவனுடைய சொந்தத்தூதராகவந்து மங்களவார்த்தை கூறிய கபிரியேல்சம்மனசானவரே வேதாகமத்தில் மரியாயை வாழ்த்துகின்றார். சம்மனசானவர்கூறிய இந்த வாழ்த்தையே செபமாலை 53 முறை திரும்பத்திரும்பச்சொல்லுகின்றது. இந்த வாழ்த்துதலை அது திரும்பத்திரும்ப 53முறை சொல்லுவது, விளம்பரகாரர் சொல்லுவதுபோன்று, அடுத்தடுத்துக் கூறுவது பிரஸ்தாபத்தை உண்டுபண்ணுகிறது என்பதினல் அல்ல, ஆனல், பிரஸ்தாபமே திரும்பத்திரும்பச் சொல்லச் செய்கிறது என்பதினலேயாகும். தேவனுடையசம்மனசானவரால் தேவதாயாருக்கு அருளப்பட்ட புகழ்ச்சி, "ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள்" என்பதும், "சர்வேசுரனுடையமாதா" என்பதுமே.

ஆகவே, செபமாலைஎன்பது வேதாகமத்தின் மகா விளக்கமான வாய்ச்செபங்களைக்கொண்ட ஓர்சங்கிலித் தொடராகும். அவைகளைத் திரும்பத்திரும்பச் சொல்லுவதானது, திவ்வியயேசுவுடையவும், அவர் திருத்தாயாருடையவும் புனிதவாழ்க்கையிலே அடங்கியுள்ள தேவபரம இரகசியங்கள்பற்றிய தியானத்தால் ஒருங்கே இணைக்கப்பட்டிருக்கின்றது. செபமாலைசொல்லுவது கிறீஸ்துநாதரிலும், மரியாயிலும் இருப்பதையே கருதுகின்றது. அவர்களின் சந்தோஷங்கள், துன்பதுயரங்கள் எல்லாவற்றிற்கும் அது நெருங்கியவிதமாய் நம்மைக் கொண்டுசெல்கின்றது. அத்துடன் அவர்களின் வல்லபம், ஞானம் எல்லாவற்றிற்கும்— அவர்களின் பொறுமை, நேசம் எல்லாவற்றிற்கும் திவ்வியயேசுவும், மரியாயும் செபமாலையிலே படிப்பிக்கிறார்கள். அவர்கள் படிப்பிப்பதிலும் அதிகஞ்சிறந்தவிதமாய் யார்ஓர்குடும்பத்தைப் படிப்பிக்கமுடியும்? அவர்கள் படிப்பிப்பதிலும் அதிகஞ்சிறந்ததாய் ஓர்குடும்பம் என்னத்தைப் படிக்கமுடியும்?

உங்கள் குடும்பவட்டாரத்திலே செபமாலையை உரத்தசப்தமாகச் சொல்லுங்கள். அதிகவல்லபம் பொருந்திய இந்தச்செபமாலைப் பந்தனத்திலே உங்கள்குடும்பத்தில் உள்ளவர்களையெல்லாம் ஐக்கியப்படுத்துங்கள். ஒருவர்ஒருவரை நேசிக்கிறவர்கள் செபத்தால் தேவநேசத்தில் நிலைத்திருக்கிறார்கள். அவர்களின் செபத்துக்குத் தேவன் அளிக்கும்பதில், ஒருவர் மற்றவரின்நேசத்தில் அவர்களை எப்போதும் காத்துவைப்பதேயாகும்.

# தாயகத்தில் புதிய மேற்றிராணியார்

கண்டிநகரின் புதியமேற்றிராணியாரான மகாவந். டொன் லேயோ நாணயக்கார ஆண்டவர் அவர்களுக்குச் சென்ற 10-ந்திகதி சனிவாரமன்று மாத்தளைப் பட்டினமக்கள் மகத்தான ஒருபொதுவரவேற்பு அளித்தார்கள். பட்டினவாயிலிலே அமைக்கப்பட்டிருந்த அலங்காரமிக்க பிரமாண்டமான பந்தரில் அவரைவரவேற்று நின்ற மாபெரும்மக்கள்குழாமில் ஆண்டவர்அவர்கள் அங்கு ஓர்மாணவராயும், மாத்தளைக் கச்சேரியிலே ஓர்அரசாங்க லிகிதராயும் இருந்தகாலத்தில் அவரை நன்கறிந்த பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருந்தார்கள்.

கண்டிமேற்றிராசன விக்கார்-ஜெனறல் அதிவண. டி. டி. பார்செனபாக் சுவாமிகள், கண்டி, அர்ச். அந்தோனியார் கல்லூரிஅதிபர் வண. டி. எச். றுடல்வ்சுவாமிகள் சமேதராய்ப் புதிய மேற்றிராணியார் அங்குபோய்ச்சேர்ந்தபோது, மாத்தளை விசாரணைப்பங்குக் குரவர் வண. போல் பெறேருசுவாமியவர்கள் அவரை வரவேற்றுநின்றார். சுகத்தாழ்வுகாரணமாக அங்குவாமுடியாதிருந்த மாத்தளைப் பட்டினதலைவரின் பிரதிநிதியாச் சமுகமளித்திருந்த உபதலைவர் ஜனுப் என். எல். ரி. டீண் அவர்களும், சபைஅங்கத்தவர்களும் மேற்றிராணியாண்டவருக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டார்கள்.

அதன்மேல்அவர் ஜனுப் டீன்அவர்களாலும், வரவேற்புக்கம்மிற்றியின் காரியதரிசியான திரு ஆர். அந்தோனி அவர்களாலும் புஷ்பாரங்கள் சூட்டப்பட்டபின் பட்டினசபையின் சார்பாகத் திரு. பி. ஏ. பத்திராஜுஅவர்கள் பேசியவிடத்து: கண்டிநகரின் முதல்சிங்கள மேற்றிராணியாராக நாம் தங்களைப் பெறக்கிடைத்ததையிட்டு எமக்குண்டாயிருக்கும்மகிழ்ச்சியோ மிகப்பெரியதாகும்; இன்னும் "மாத்தளை இளைஞர்" தாயகம் திரும்பிவந்திருக்கிறார் என்று குதூகலித்துத் தங்களைநல்வரவேற்கிறோமென்ற உணர்ச்சிப்பெருக்கினால் அப்பெருமகிழ்ச்சி பன்மடங்காக அதிகரிக்கின்றது; தாங்கள் ஓர்பாலியராய் இருந்தபோது கல்விபயில்வதில் காட்டியசிரத்தையும், பின்னர்ஓர்இளைஞராயிருந்தபோது அரசாங்கத்தின்கீழ் மனச்சாட்சிக்கொத்தவாறு நேர்மையாக ஆற்றியசேவையும், அதன்மேல் உலக சுகபோகங்களையெல்லாம் அறவேதுறந்து செய்துள்ளதியாகமும் ஆதியனவெல்லாம் எமது பட்டினத்தின் சரித்திரவாலாற்றிலே இணையற்றனவாய், எதிர்கால இளஞ்சந்ததிக்கெல்லாம் காண்பிக்கப்பட்டுள்ள சிறந்தமுன்மாதிரிகைகளாய்த் திகழ்கின்றன எனப் பகரலாயினர்.

பின்னர் ஆண்டவர்அவர்கள் மோட்டார்வாகனம்ஒன்றிலே பட்டினப்பெருந்தெருவினூடாகப் பகிரங்கவைபவம் நிகழவிருந்த சென்தோமஸ் கல்லூரி மண்டபத்துக்குக் கண்டிநடனகாரர், மத்தளகாரர் ஆடிப்பாடிமுன்செல்ல, சாரணர்களும், கரற்வீரர்களும் அணிவகுத்துச்செல்ல, ஆடம்பரஊர்வலமாக அழைத்துச்செல்லப்பெற்றார். அங்கே சென்தோமஸ்கல்லூரியின் முன்னாள்அதிபரும், மேற்றிராணியாண்டவரின்காலத்திலே அக்கல்லூரி அதிபராய் விளங்கியிருந்தவருமான திரு. சாள்ஸ் ரெபின்ஸன் அவர்கள் எழுந்து, ஆண்டவர் அவர்கள் மாத்தளை அர்ச். அக்னேஸ்அம்மாள் மடத்தில் கல்விபயின்றகாலமுதல் கண்டி, அர்ச். அந்தோனியார்கல்லூரியின் ஆரம்பகல்விப்பகுதித் தலைமைஆசிரியராகக் கடமைபார்த்துள்ள காலம்வரை அவரது முன்னையவாழ்க்கைபற்றி அழகாகப் பேசினார். புதியமேற்றிராணியார் கண்டி மேற்றிராசனத்தின் இலங்கையரான இரண்டாவது மேற்றிராணியாரென்றும், இலங்கையரான முதலாவது மேற்றிர்ராணியாராகும் மகாவந். பீட் பெக்மெயர் ஆண்டவரும் மாத்தளைப் பட்டினவாசியேயென்றும் கூறினர்.

புதியமேற்றிராணியார் எழுந்து, சகலருக்கும் நன்றிதெரிவித்துப் பேசியவிடத்து: "நீங்கள்நம்மைக் கெளரவப்படுத்தவேண்டியதில்லை; ஆனால் நாமே உங்களைக் கெளரவப்படுத்தவேண்டும்; ஏனெனில், நாம்இன்று வகித்திருக்கும் பதவிக்குப் பாத்திரவாளிகள் கத்தோலிக்கரும், கத்தோலிக்கர் அல்லாதோருமாயுள்ள இருபாலாருமான மாத்தளை மக்களே. கத்தோலிக்கரும், கத்தோலிக்கர் அல்லாதோருமான இருபாலாரும் நமதுஇல்லத்துக்கு உள்ளும்புறமும் இருந்தார்கள்; கத்தோலிக்கர் அல்லாதவர்கள் நமக்குஒருபோதுமே எத்தகையவிக்கினத்துக்கும் இடமாய் இருந்ததில்லை; ஆனால், அதற்குப் பதில் கத்தோலிக்கர் அல்லாதோரிடமிருந்து நாம்அதிகம் கற்றுக்கொண்டோம்" எனக் கூறலாயினர்.

அவ்வேளை கருங்காலிமரத்தினல் செய்யப்பட்ட இருயானைகள்தாங்கிய வெள்ளிச்சிமிழ்களில்வைத்த வரவேற்புப்பத்திரங்களும், பணமுடிப்புஒன்றும் அவருக்குச் சமர்ப்பிக்கப்படலாயின.

# இருள்சூழ்ந்த வாழ்க்கை

[ ம. க. யோட்ஸ் — பருத்தித்துறை ]

ஒருசிற்றூர். அதிலேமக்கள்நிறைந்த அக்களிப்புடன் வாழ்ந்துவந்தார்கள். அங்கே இருளில்ஒளி இலங்குவதுபோல் விளங்கிக்கொண்டிருந்தது ஒரு குடும்பம். அக்குடும்பத்திலே அமலனின்அருள் சொரிந்துகொண்டிருந்தது. ஆயினும் குடும்பத்திலே அகமகிழ்வில்லை. காரணம், பிள்ளைப்பேறின்மையே. கணவன்—மனைவியின் அன்பை உறுதிப்படுத்துவது பிள்ளைப்பாக்கியமே. இந்தப்பாக்கியம் இல்லாதிருந்தும் அமலனின்வழிபாட்டை அவர்கள் அவமதிக்கவில்லை. தங்கள் செபத்தைத் தபத்துடன் சேர்த்துச் செய்துவந்தார்கள்.

அன்பேஉருவும், அருளேவடிவும் கொண்ட அமலன் அவர்களின்செபதபங்களை அங்கீகரித்தார். ஆகவே, அவர்களுக்குப் பெருந்திறனும், அருஞ்செயலும்வாய்ந்த ஒரு ஆண்குழந்தையை அளிக்கச் சித்தமானார் ஈசன். அதன்படி அக்குடும்பதலைவி அழகமைந்த ஓர்மகவைப்பெற்றாள். ஆண்டவனின் அருள்பூண்டபடியால் "அருள்நேசன்" என்னும் பெயர்பூண்டான் சிறுவன். பெயருக்கேற்ப அருங்குணமுடையவனாய் அவனும் திகழத் தொடங்கினான். தக்கபிராயத்தில் தகுந்தகல்விபயின்று தேர்ச்சிபெற்று விளங்கிவருங்கால், அவனும்வாலிபப் பிராயத்தைக் கோலிப்பிடித்தான். அவனுடையதிறமையை எண்ணிப் பெற்றோர் பெருமிதமுற்றனர். உற்றார் உவகைபூர்த்தனர்.

ஈற்றில், "பருவத்தே பயிர்செய்" என்பதற்கிணங்க அவனுக்கு விவாகஞ்செய்துவைக்கப் பெற்றோர்முனைந்தனர். மகனை அழைத்தனர். மனக்கருத்தை வெளியிட்டனர். இதைக்கேட்டதே அருள்நேசனின்மனம் அனலில்இட்ட புழுப்போல் துடித்தது. அம்புபட்டமான்போல் பதைத்தது. அவனுடைய அருள்வதனத்தில் இருள்படரத் தொடங்கியது. ஏன்? ஏனெனில், அவன் தேவஅழைத்தலுக்குச் செவிசாய்த்திருந்தான். தன்உள்ளத்திலே அவன் இல்லறத்தில்வெறுப்பும், துறவறத்தில்விருப்பும் கொண்டிருந்ததைப் பெற்றோர் அறியவில்லை. அதனால் தனதுமனக்கருத்தைப் பெற்றோருக்கு அவன்வெளியிட்டான். இதைக்கேட்டதும் தந்தைசினந்து சிங்கம்போலக் கர்ச்சித்தார். தாய் கவலைமேலிட்டவளாய் ஒப்பாரிவைக்கத் தொடங்கிவிட்டாள். அவர்களின் இல்லம் அல்லோலகல்லோல மாகிவிட்டது. ஆயினும் தனயன் தனதுஎண்ணமேபெரிதென்று சங்கல்பம்செய்து அவர்களின் எண்ணத்துக்கு இசையமறுத்துவிட்டான்.

கோபமும், கவலையும் கொண்டபெற்றோர் அவன்மனதைத் தங்கள்பக்கம் திருப்பிவிடுமாறு செய்யாத தந்திரமெல்லாம் செய்தனர். தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்தினர். எறும்பூரக் கற்குழியும்அல்லவா? அடிமேல் அடியடித்தால் அம்மியும் நெகிழும்அன்றோ! அல்லும்பகலும் அவர்கள்கூறிய ஆசைவார்த்தைகளில் அருள்நேசன் மருண்டான். இல்லறமே இன்பமென்றும், துறவறமோ துன்பமென்றும் தன்மனதில் பதித்துக்கொண்டான். அவர்கள் சொற்படி மணஞ்செய்துகொள்ள மனங்கொண்டான். அதனால் தந்தையும் தாயும் மகிழ்ச்சிக்கடலில் துள்ளியெழுந்தனர். விவாகமும் விமரிசையாகநடைபெற்றது.

இல்லறவிமானம் இன்பவானில் ஒருவிதஇடருமின்றி ஊர்ந்துகொண்டிருந்தது. ஆறுமாதகாலம் நகர்ந்தது. அவ்வாறாக ஒருநாள்அருள்நேசன் தனதுஉடலிலே அபாயகரமான ஓர் வியாதியின் அறிகுறிகள் தோன்றுவதைஉணர்ந்தான். நாளடைவில் அவன்வியாதி மின்னல்போல்பரவியது. வைத்தியரிடம்காட்டிச் சிகிச்சைசெய்வித்தும் குணமுறாது பைத்தியம்பிடித்தவன்போலானான். காரணம், வைத்தியர் "அவனுக்குக் குஷ்டம்" என்று கூறியதே. அவன்அடைந்த மனக்கஷ்டத்துக்கோ ஓர்எல்லையில்லை. இல்லறப்படகை இயக்கிக்கொள்ள இயலாது கலங்கினான் இவ்வியாதியால். இப்போது அவன்வாழ்க்கை 'புல்லிற்கொட்டிய அமுதம்'போலாயிற்று. உலகில் பயனற்ற ஓர்மனிதப்பிறவியானான். நிற்க,

ஏ, தந்தையே! உன் சந்ததியின் விருத்தியைநினைந்து உன்மைந்தனை எந்தப்பாழ்ங்கிடங்கினுள் வீழ்த்தினாய்? தற்போதுஅவன் இல்லறமென்றவளாவினுள்புகுந்து, துறவறம்பூண்டான்போன்று ஓர்தனிக்குடிசையிலல்லவா வாழ்கிறான்? இப்போது அவனால் உனக்கும், உன்மனைவிக்கும், அவனது அருமை ஆரணங்கிற்கும் எவ்வளவு சொல்லரியகவலை. இப்போது உனது சந்தானவிருத்திக்குக் கோடரிவைக்கப்பட்டதைச் சந்தேகமறத் தெரிந்துகொண்டாயே. இனிமேல் உன்மைந்தன் இருந்தென்ன? இறந்தென்ன? அருமைத்தந்தையர்களே! தங்களுக்கு ஓர்அரியவிண்ணப்பம்! "தேவஅழைத்தல்" என்பது அடைதற்கரிய ஒரு பெரும்பாக்கியம். ஒவ்வோர்குடும்பத்திலும் தாய்தந்தையர்செய்யும் தபசெபங்களின்பயனாகவே, தேவன் அக்குடும்பங்களிற்சிலரைத் தமக்கு ஊழியம்பண்ணும்படி தெரிந்துகொள்ளுகிறார். இச்சந்தர்ப்பத்தில் சிலபெற்றோர் "தேவஅழைத்த"லை நாடுகின்ற தங்களதுசெல்வங்களுக்கு வழிமறிதூதுவராகநின்று முட்டுக்கட்டை போடுகிறார்கள். அதனால் ஆண்டவனின்கோபத்துக்கு ஆளாகிஅகோரமான தண்டனை பெறுகிறார்கள். எனவே, அருமைத்தாய்தந்தையர்காள்! உங்கள்செல்வமைந்தர் தேவனுக்கு ஊழியம்செய்ய ஊக்கம் கொண்டால் நீவிர் ஏக்கங்கொள்ளாது அவர்கட்கு வேண்டிய துணை புரியுங்கள். உங்கள்நிலைமையைப்பற்றி உளம்வருந்தாதீர்கள். அழைக்கிறவர் அனைத்தையும் நன்கறிவார். தேவஅழைத்தலுக்குச் செவிசாய்க்கும் உங்கள் செல்வமைந்தர்களைத் தேவஊழியத்துக்கு அர்ப்பணித்தால் ஆண்டவர் உங்களை மண்ணுலகிலும், விண்ணுலகிலும் ஆசீர்வதிப்பாரென்பது திண்ணம்.

வணக்கம்.

[இக்கதையில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. இஃது இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவதன்று.]

## ஆசிரியசேவைப் பூர்த்திவிழா

சிலாபம், அர்ச். மரியநாயகியின் தமிழ்ஆண்கள்பாடசாலை உதவிஆசிரியரான சங். சகோதரர் மத்தேயு எவ். பி. எம். அவர்கள் 60வயதுபூர்த்தியானதால் ஆசிரியசேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு நன்றி பாராட்டுமுகமாகச் சென்ற30-9-59 புதன்கிழமை பிரியாவிடைவைபவம் ஒன்று விமரிசையாக நடந்தேறியது. அன்று அர்ச். கார்மேல்மாதாஆலயத்தில் காலை6-30மணிக்கு வண. தியதோர்சுவாமியவர்கள் ஓர்பாட்டுப்பூசை நிறைவேற்றினர். தொடர்ந்து காலை 9மணிக்குப் பலகுரவர்களும், சங். சகோதரர்களும், சிலாபத் தமிழ்ஆண்பாடசாலை ஆசிரியர்குழாமும் புடைசூழப் பிரியாவிடைநாயகரை நடுவிடமாகவைத்து ஓர்பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. அதன்மேல் அவர் பூமாலைசூட்டிப் பாடசாலைமண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பெற்றார். மாணவர்கள் பிரியாவிடைக்கீதங்கள் பாடியதும், மாணவர்மன்றத்தின் சார்பாகச் செல்வன் தோ. யோசேப் ஜோன்சன் ஓர்பிரிவுபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்க, ஆசிரியகுழாமின் சார்பாகத் திரு. சிறில்ஆசிரியர் ஓர் சொற்பொழிவுநிகழ்த்தினார். ஒவ்வொருசாராராலும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. தொடர்ந்துதலைமை ஆசிரியராலும், சலாபவட்டார வித்தியாதரிசியாலும், சலாபத் தமிழ்ஆண் பாடசாலையின் முன்னாள் தலைமைஆசிரியரும், மாத்தளை மரியாயின் பிரான்சிஸ்கன்சபைச் சகோதரர்களின் சிரேஷ்டாதிபருமான அதிசங். பிரான்சீஸ் சேவியர் எவ். பி. எம். அவர்களாலும் பிரியாவிடைநாயகரின் சீரியகுணநலங்கள், சேவைத்திறன்களைப் புகழ்ந்து சொற்பொழிவுகள்பல ஆற்றப்பட்டன. கடைசியாகப் பிரியாவிடைநாயகர் அனைவருக்கும் நன்றிகூறியதும் பரிமளிப்பான சிற்றுண்டிஉபசரணையுடன் இனிதேவிழா முடிவடைந்தது. பின்னர்2-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல்3மணிக்குப் பிரியாவிடைநாயகரைச்சபையின் தலைமையிடமாகியமாத்தளை மரியாயின்பிரான்சீஸ்கன் ஆச்சிரமத்துக்குப் பாடசாலைஆசிரியர் அழைத்துச்சென்று பிரியாவிடை கூறித் திருப்பினார்கள்.

ஜே. சீ. குரூஸ்

● முரிந்தஎலும்புகளை 48மணிநேரத்தில் ஒட்டக்கூடிய "ஒஸ்ரமார்" என்றபசையைத் தான் கண்டுபிடித்துச் செய்திருப்பதாகவும், அடுத்தகார்த்திகையிலே அதனை டக்றர்மாரின் உபயோகத்திற்கு அளிக்கவிருப்பதாகவும் ஒருபிரபல மருந்துஉற்பத்திக்கம்பெனி சென்றசனிக்கிழமை நியூயோர்க்நகரிலே தெரிவித்திருக்கிறது. இந்தத்தடித்த பசைமருந்தை முரிந்தஎலும்பின்மேல் பூசிமுறையாகக்கட்டிய 48மணிநேரத்தில் அதுஒட்டப்பட்டுவிடுமென்று சொல்லப்படுகிறது.

● பிரான்சுக்கும், இங்கிலாந்துக்குமிடையிலுள்ள ஆங்கிலேயகால்வாயை நீந்திக்கடக்கும்போட்டியில் கலந்துகொண்ட 19வயதுடைய ஆரதிஸகா என்ற கல்கத்தாச்சர்வகலாசாலை மாணவியான இந்தியபெண்மணி அக்கால்வாயை நீந்திக்கடந்திருக்கிறாள். ஆங்கிலேயகால்வாயை நீந்திக்கடந்த முதலாவது ஆசியபெண்மணி இவள்தான். பிரான்சியகரையிலிருந்து புறப்பட்ட இவள் 16மணி20நிமிஷத்தில் அக்கால்வாயைக்கடந்து இந்தியதேசியக்கொடியைக் கையில்ஏந்தியபடியே பிரித்தானியகரையைப் போய்ச்சேர்ந்தாள்.

பிரஸ்தாபம் பெற்றுவரும்

## பாப்பரசர் பிறந்த கிராமம்

23-ம் அருளப்பபாப்பரசர் பிறந்தவிடமென்றமட்டிலே சொட்ரோ இல் மொண்ரேஎன்றகுக்கிராமம் திடீரெனப் பிரஸ்தாபம்பெற்றமையால் அதன்தெருக்கள் துரிதமாகத் திருத்தப்பட்டு, பெருந்திரளாகச் சரிந்துகொண்டிருக்கும் தரிசகர்களுக்கு வேண்டிய தங்குவசதிகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. அங்குள்ள அர்ச்.மரியநாயகியின்முன்னுள் பங்குக்கோவிலுக்குச் சமீபமாகத் துப்புரவுசெய்த பதினயிரம்சதுரஅடி விஸ்தீரணமான கார் பாக்கத்துக்குக் கற்கள் பதிக்க அக்கிராமத்தால் முடியாமல்போய்விட்டது. ஆயினும், சமீபமான வால்பிறெம்போ பட்டினத்திலுள்ள அஸொலாறி என்றதெருஅமைக்கும்கம்பெனி முன்வந்து பாப்பரசருக்கு ஓர் உபசாரமாக அந்தவேலையைச் செலவு வாங்காமலே முடித்துக் கொடுத்திருக்கிறது.

---

இரட்சகரின்

## தையலில்லாத திருஅங்கி

வடமேற்கு ஜேர்மனியிலுள்ள திரியர்நகர் ஆசனக்கோவிலிலே 1933-ம்ஆண்டுக்குப்பின் முதன்முறையாகச் சென்றஆடிமாதம் 19-ந்திகதியன்று பகிரங்கவணக்கத்துக்கென்று வைக்கப்பட்டிருந்த திவ்விய இரட்சகரின் தையலில்லாத திருஅங்கிக்காட்சி சென்ற புரட்டாசிமாதம் 27-ந்திகதி ஞாயிறன்று முடிவடையலாயிற்று. இனிமேல் நிகழும் நூற்ருண்டு முடிவடைகிறவரையில் அது காட்சிக்கு வைக்கப்படமாட்டாது. ஆடி 19-ந்திகதிமுதல் அன்றுவரை 20லட்சம் யாத்திரிகர்களை அது ஈர்ந்திருக்கிறது. இவர்களில் அநேகர் கால்நடையாக அங்கு சென்றிருந்தனர். காட்சியின் ஈருந்ததின மன்று திருக்காரியாலய பதிற்காரியதரிசியான கருதினல் ஒத்தாவியானி ஆண்டவர் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். அன்று 35,000 யாத்திரிகர்களுக்குமேல் சமூகமாயிருந்தார்கள்.

---

முப்பதினயிரம்

## திவ்விய பூசைகள்

அடுத்துநிகழும் 1960-ம்ஆண்டு ஆடிமாதம் 31-ந்திகதிமுதல் ஆவணிமாதம் 7.ந்திகதிவரை மூனிச்நகரில் நிகழவிருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாசமாகமத்தின்போது திறந்தவெளிமைதானத்தில் முப்பதினயிரம் திவ்விய பூசைகள் நிறைவேறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. நகரின் மத்தியதானத்துக்குச் சமீபமாகவுள்ள பிரமாண்டமான சதுரவடிவமுள்ள மைதானத்திலே இந்தத்திவ்வியபூசைப் பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். யுத்தத்தின் முன் 10லட்சம் கத்தோலிக்கரைக் கொண்டிருந்த மூனிச்நகரம் இன்று 8லட்சம் கத்தோலிக்கரையே கொண்டிருக்கின்றது. அப்போது அந்நகரில் 87கோவில்கள் இருந்தன. இவற்றில் அரைவாசியும் அழிவடைந்தோ அன்றேல் படுமோசமாகச் சேதமடைந்தோ போயின. யுத்தம் முடிந்ததுமுதல் 53 கோவில்கள் திரும்பக் கட்டப்பட்டும், பழுதுபார்க்கப்பட்டுமுள்ளன.

---

# அன்பளிப்பாகப் பெற்ற மந்திரமாலை

இங்கிலாந்தில் அய்ப்பட்டினத்து அங்கிளிக்கன்சபைப் பாதிரியாரான கனன் டொனல்ட் றீ அவர்கள் சென்றகோடைகாலத்தில் தாம்பெற்றுக்கொண்ட ஓர் பேட்டியின்முடிவிலே தமக்கு அன்பளிப்புச் செய்யப்பெற்ற அருளப்பபாப்பரசரின் திருச்சபை மந்திரமாலைப் புத்தகங்கள் நான்கிலும் ஒன்றைச்சமீபத்திலே லண்டன்நகரிலுள்ள "யூனிவேர்ஸ்" என்ற பிரபலகத்தோலிக்கபத்திரிகைக் காரியாலயம் கொண்டுசெல்லலாயினர்.

இந்தப்புத்தகம் கருமையான பதனிட்டதோல்கொண்டு கட்டப்பெற்று, அதன் அட்டையிலே பரிசுத்தபிதா வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாக இருந்தபோது தாங்கியிருந்த விருதுசின்னம் பொன்னிலே முத்திரைகுத்தப் பட்டிருக்கிறது. அதன் ஆரம்பபக்கவெள்ளேட்டில் பாப்பரசரின்நாமமும், அவரது சொந்தக்கரத்தால் அதிகாரவரிசைப் பெயரும்பொறிக்கப்பட்டுள்ளன. மந்திரமாலையின் உட்புறத்திலே பாப்பரசரின் தந்தையாரான பற்றிஸ்ரா றெங்கலிஅவர்களின் ஞாபக 'காட்' இருக்கின்றது.

வழமைக்குமாருன இந்தவெகுமானத்தைப் பரிசுத்தபிதா வழங்குவதற்குநேர்ந்த சந்தர்ப்பத்தைக் கனன் றீபாதிரியார் விப்ரித்துக்கூறியவிடத்து: அருளப்ப பாப்பரசரின் வர்ணப்படம்ஒன்றை உள்ளேகொண்ட எனது சொந்தமந்திரமாலையை அப்போது நான்வைத்திருந்தேன்; பாப்பரசர் என்னிடம்வந்தபோது நான்அவருக்கு அவருடைய பிரதிமைப்படத்தைக் காண்பிக்குமாறு எனதுமந்திரமாலையைத் திறந்தேன்; பாப்பரசர் அதைப் பார்த்துவிட்டுப்பின்னர்ஒருபக்கமாகத்திரும்பித் தமதுகாரியதரிசியுடன் சம்பாஷித்தாரெனக் கூறலாயினர்.

பாப்பரசர் என்னசொன்னர் என்பது பிந்தஎனக்குப் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது. "அவருடையமந்திரமாலை அதிகம் கந்தலானதாய் இருக்கிறது. வெண்மையிலே கட்டப்பெற்ற புதியது ஒன்றை நாம் கொடுக்கமுடியும். ஆனல், நமக்குச் சொந்தமான ஒன்றை நாம்கொடுக்கவேண்டுமென எண்ணுகிறோம். அது அதிகம் நல்லநிலைமையில் இல்லை. ஆனல், அவருடையதிலும்பார்க்க மிகவும்சிறந்தது."

—✻—

உலகின் தலைவர்களுக்காக

## வேண்டிக்கொள்ள வேண்டும்

பரிசுத்தபிதா காஸ்தெல்காந்தல்போவிலுள்ள தமது கோடைகாலவாசஸ்தலத்தில் அளித்த பகிரங்க பேட்டிகளுள் ஒன்றில்: "உலகின் பெரிய தலைவர்கள் கூடிப் பேச்சுவார்த்தை நடத்துகையில் கிறீஸ்தவர்கள் அதுபற்றித் தாங்களும் அக்கறைகொண்டவர்களாயிருந்து, அப்பேச்சுகளால் உருப்படியானபயன் ஏற்படுமாறு தேவனை வேண்டிக்கொள்ளவேண்டும்" என்று கூறினர். சோவியற்பிரதமர்குருஷேவ் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துவந்தகாலத்தில்தான் காந்தல்போவில் இப்பேட்டி அருளப்பட்டது. பாப்பரசர் ஐஸனேவருடையவோ, குருஷேவுடையவோ பெயர்களைக் குறிப்பிடவில்லை. எனினும், அவருடைய சிந்தனையில் இருந்தவர்கள் முக்கியமாக இவ்விரு தலைவர்களுமேயென்று ஊகித்துக்கொள்ளலாம். "தேவனுடைய சித்தம் சிறந்தமுறையில் நிறைவேறும்படியாக வேண்டிக்கொள்ளுங்கள். பூவுலகின் தலைவர்களிடையே செய்யப்படும் உடன்படிக்கைகள் பெத்லஹேமில் சம்மனசுகள் விடுத்த 'உன்னதங்களில் தேவனுக்கு மகிமையும், பூவுலகில் நல்லமனதுடைய மனிதர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக!' என்ற வாழ்த்துரைக்கு ஒத்துவருவனவாய் இருக்குமாறு வேண்டிக் கொள்ளுங்கள்" என அவர் விளக்கினர்.

---

சீனவிலே மிஷனரிமார்செய்யும்

## குற்றம் என்ன ?

தேவதொண்டுக்கெனத் தங்களை அர்ப்பணஞ்செய்த "குற்ற"த்திற்காகவே சீனக்கம்யூனிஸ்தர்கள் மிஷனரிமாரைச் சிறைவைத்தார்களென்று செஞ்சீனவிலே ஐந்துவருடகாலம் சிறைவாசஞ்செய்தபின் சமீபத்திலே விடுதலையடைந்து அத்தேசத்தைவிட்டு வெளியேறிய ஓர்மரினேல் சபைக்குருவரான வண. யோசெவ் மைக்கோர்மைக் சுவாமியார் ஹொங்கோங் தீவுபோய்ச் சேர்ந்ததும் அங்கே தெரிவித்திருக்கின்ருர். இவர் 1953-ம் ஆண்டு ஆனிமாதம் கைதுசெய்யப்பெற்று ஐந்துவருடச்சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றிருந்தார். 1949-ம்ஆண்டு கம்யூனிஸ்தர்கள் சீனவை அடிப்படுத்தியது முதல் மிஷனரிமாரில் சுமத்தப்பட்ட அதேகுற்றச்சாட்டுத்தான் — அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்காக உளவுபார்க்கிருர்கள்; சதி செய்கிருர்களென்ற அதேகுற்றச்சாட்டுத்தான் இவர்மீதும் சுமத்தப்படலாயிற்று. ஆனல், உண்மைக்காரணத்தைச் சுவாமியாரே பின்வருமாறு தெரிவித்திருக்கின்ருர். "நான் ஓர் கத்தோலிக்க குருவானவராயிருந்து, சமயத்தைப் போதிக்கிறேனென்ற காரணமாகவே சீனக் கம்யூனிஸ்தர்களால் நான் கைதுசெய்யப்பட்டேன்; நான் ஓர் அமெரிக்கர் என்றபடியால் அவர்கள் என்மட்டிலே இருமடங்கு கடுமையாக நடந்துகொண்டார்கள்."

---

இந்திய கத்தோலிக்க

## வைத்திய கல்லூரி

இந்தியாவிலே வைத்தியஉபகரணங்களெல்லாம் பூரணமாக அமைந்துள்ள கத்தோலிக்க வைத்திய கல்லூரிஒன்றை அடியிடுவதில் தாங்கள் உதவிசெய்வதாக மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த கருதினல்மார்இருவர் தமக்கு வாக்களித்திருப்பதாகப் பம்பாய் அதிமேற்றிராணியாரான கருதினல் வலேரியன் கிருசியாஸ்ஆண்டவர் ரோமைநகரில் தெரிவித்திருப்பதாகச் சென்ற வியாழக்கிழமை அங்கிருந்து தந்திச்செய்தி கிடைத்திருக்கிறது. தமதுஆறுவார ஐரோப்பியவிஜயத்தின்முடிவில் ரோமைநகர் வந்துசேர்ந்துள்ள கருதினல் கிருசியாஸ்ஆண்டவர் இந்தக்கத்தோலிக்க வைத்தியகல்லூரியைப்பற்றிக் கொலோன்நகர கருதினல் யோசெவ் பிறிங்ஸ்ஆண்டவருக்கும், மூனிச்நகர கருதினல் யோசெவ் வென்டல்ஆண்டவருக்கும் விளக்கியபோது தங்கள்உதவியையும், தங்களது ஞானம்ந்தைகளின் உதவியையும் அளிப்பதாக இருவருமே வாக்களித்துள்ளார்கள். கல்லூரியை அமைக்கும்இடம் இன்னும்தீர்மானிக்கப்படவில்லை.

---

ருஷியர்கள்

மீண்டும் சிறைவைத்துள்ள

## அதிமேற்றிராணியார்

மேற்குஉக்றேயின் நாட்டைச் சேர்ந்த லுவோநகர் அதிமேற்றிராணியாரும், ருஷிய கூட்டடைமுகாம்ஒன்றிலே பதினான்கு வருடகாலம் செலவிட்டபின் சென்றவருடமே விடுதலைசெய்யப் பெற்றவருமான யோசெவ் சிலிப்ஜ்ஆண்டவர் திரும்பவும் கைதுசெய்யப்பெற்றுச் சைபீரியாவில்மேலும்ஏழுவருடச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்ருர். 67வயதுடையவரான இவர் 1958-ம் ஆண்டு பங்குனிமாதம் முதல் மத்தியசைபீரியாவிலே முக்லாக்கோவோஎனுமிடத்திலுள்ள வயோதிகர்கள் இல்லம்ஒன்றை விசாரணைசெய்யும்பொறுப்பாளியாய் இருந்தார். இவரின் குற்றவிசாரணை கியெவ்நகரிலே அந்தரங்கமாக நடைபெற்று மூன்று நாள்வரை நீடித்திருந்தது. அந்தரங்கமான சதிச்செயல்களில் ஈடுபட்டிருந்தாரென்று இவர்மீது குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது. வெறும் எலும்புக்கூடாக இவர் காட்சியளிக்கிருரென்றும், இவருடைய தாடியும், மீசையும், தலையும்முற்ருகநரைத்துப்போய்விட்டனவென்றும் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட கடிதம்ஒன்றிலே அறிவிக்கப்பட்டுள்ளது. 1945-ம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட உக்றேயின்நாட்டு மேற்றிராணியார், அதிமேற்றிராணிமாரெல்லாம் இறந்துபோய்விட்டார்கள்.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

## ஐப்பசி மாதம்

பொதுக்கருத்து: பொதுத்தியானப் பிரசங்கங்கள் இன்னும் அதிகமாகவும், அதிக பலனளிக்கும் வகையிலும் நடைபெறுவதற்காக வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து: கிறீஸ்தவர்கள் அனைவரும் வேதபோதக நாடுகளின்மீது தங்களுக்குள்ள கடமையை முற்றும் அறிந்து, பலனுறஅதை நிறைவேற்றுவதற்காக மன்றாடிக்கொள்வது.

* * *

## காலையில் ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயின மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 22-ந் திகதி

## நமது தெய்வீகஅரசர்

"அப்படியானல், நீ ஓர் இராசாவோ" என்று பிலாத்தன் வினவியபோது, யேசுநாதர் மாறுத்தரமாக "நான் இராசாஎன்று நீரே சொல்லுகிறீர்" எனப் பகர்ந்தார். யேசுக்கிறீஸ்துநாதர் உலகின் அரசர். ஏனெனில், உலகம் கடவுளின் படைப்பு. கிறீஸ்துநாதர் கடவுள். மேலும் கிறீஸ்துநாதர் அரசராயிருக்கிறூர். ஏனெனில், விலைமதித்தற்கரிய தம்முடைய திருஉதிரத்தையே கிரயமாகக்கொடுத்து அவர்உலகத்தை மீட்டிரட்சித்திருக்கின்றூர். ஆயினும் உலகமக்களில் ஒருபாலார் கிறீஸ்துநாதரை அறியாதிருப்பினும், மற்றோர்பாலார் அவருடையஇராசரீகத்தை மறுப்பினும் அவர் அரசரே. நித்திய காலமும் அரசரே. ஆனல், அவர் ஞானஅரசர். "என்இராச்சியம் இவ்வுலகுக்கு அடுத்ததல்ல" என்று அவரே பிலாத்தன் முன்பாகவசனித்திருக்கின்றூர். அவருடையஇராச்சியம் உலகநீதிகளால் ஆட்சிசெய்யப் படுவதில்லை. அவருடையபிரசைகள் உலகில் வாழ் மனிதராய் இருந்தபோதிலும, உலககாரியங்களைப் பயன்படுத்தியபோதிலும் அவர்களின சுருந்த வாசஸ்தலம்—சொந்த இராச்சியம் மோட்ச இராச்சியமே.

ஆம், கிறீஸ்துநாதர் நமது அரசர். காலமென்ற கரையைக் கடந்த தெய்வீகஅரசர். நித்தியமென்ற மதில்களால் சூழப்பட்டது அவரின் இராசரீகம. அலெக்சாந்தர், நெப்போலியன், சேசார் அகுஸ்தீஸ், கெய்சர், ஸார்முதலானோரின் சக்கிராதிபத்தியங்களும், இராசரீகங்களும, வேறும் எத்தனையோ மன்னர்கள், மன்னுதிமன்னர்களின் ஆட்சிகளும், இராச்சியங்களும் எங்கே? இவர்களின கொள்கைகளுக்காக— இலட்சியங்களுக்காக இன்று உயிரைத் தியாகஞ்செய்யத் தயாராயிருக்கும் வீரர்கள்—வீரர்திலகங்கள் எவரேனும்இருக்கின்றனரா? ஆனல், இற்றைக்குச் சுமார் பத்தொன்பது நூற்றூண்டுகளின்முன் அவமானசிலுவைமரணத்திற்குள்ளான கிறீஸ்துநாதரைப்பின்பற்றி அவருக்காகத் தங்கள்உயிரைத் தியாகஞ்செய்த — இரத்த சாட்சி பகர்ந்த — இன்றும்பகருகின்ற வீரர்கள் — வீரர்திலகங்களுக்குக் கணக்குண்டா? அங்ஙனம் அவர்கள் தங்கள்உயிரைத் தியாகஞ்செய்துள்ள கிறீஸ்துநாதர்யாராயிருக்கவேண்டும்?

அன்று சென்றஎலேனுதீவிலே நெப்போலியன்சக்கிரவர்த்தி— கிறீஸ்துஇராசாவின் இராசரீகத்தை எதிர்த்துப்போராடிய நெப்போலியன் சக்கிரவர்த்தி-ஐரோப்பாவை ஆட்டிவைத்த நெப்போலியன்சக்கிரவர்த்தி தனதுமரணப் படுக்கையில் இருந்தபோது யாது கூறினுன்? கிறீஸ்துநாதரின் சாம்பிராச்சியத்தில் — ஏகாதிபத்தியத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லையென்று பகிரங்கமாகக் கூறினுன். கிறீஸ்துவேதத்தை வேரோடுகளைந்துவிடுவான் கங்கணங்கட்டிநின்ற ஜூலியன் சக்கிரவர்த்தி — எத்தனையோ கிறீஸ்தவர்களின் உதிரத்தைப் பருகிய கொடுங்கோலனுன ஜூலியன்சக்கிரவர்த்தி தனது அந்தியவேளை கிறீஸ்துவே, நீயே ஜெயமடைந்தாயென்று குரவையிட்டுக்கொண்டு உயிர்விடலானுன். கிறீஸ்துநாதருக்காக எங்கெங்கு அவருடையஞானமக்கள் குருதிசிந்தினுர்களோ அங்கங்கெல்லாம் அவருடையசிலுவைக்கொடி நிறுவப்பட்டமைக்குச் சரித்திர வரலாறு சான்றுபகரும்அன்றே!

கிறீஸ்துதேவஇராசாவின் இராசரீகப்பெருநாளை நாம் கொண்டாடவிருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே அவர் உலகமுழுவதிலும் அரசராகத்திகழும்படி நாம் என்னசெய்யவேண்டும்? நமதுசொந்த ஆத்துமத்திலே, நமதுசிந்தனையினுலே, சித்தத்திலே, அன்புணர்ச்சியிலே அவரை நமதுஅரசராகச் செய்யவேண்டும். அவரின்கட்டளைகளையும், கற்பனைகளையும் அனுசரிப்பதாலே வரக்கூடிய மகத்தான நன்மைகளை நமதுஉடன்மனிதருக்கு எடுத்துக்காட்டவேண்டும். நமதுஇல்லங்களிலே, நமதுசொந்தச்சூழல்களிலே அவரை நம்முடைய அரசராகச் செய்யவேண்டும். விசுவாசப்பரப்புதல் சபையில்சேர்ந்து அவிசுவாசிகளும், பாவிகளும், அஞ்ஞானசாதிகளும், மனந்திரும்புமபடியாக இடையறுதுசெபஞ்செய்துவரவேண்டும். இவ்வாறெல்லாம் செய்துவருவோமாளுல் நாம் அவரின் உண்மையான பிரசைகளாவோம்என்பதிற்சந்தேகமில்லை.

கிறீஸ்து இராசாவாழ்க!

### புதிய தலதாபனமந்திரி

பதவியிலிருந்து அகற்றபபட்ட திருமதிவிமலா விஜயவர்ததனவுக்குப்பதில் அவாது பாராளுமணறக் காரியதரிசியாயிருந்த திரு எம். பி டபிள்யு மெதிவக்கதலதாபனமந்திரியாக நியமனஞ் செய்யப்பெற்றுச் சென்றசெவ்வாய்க்கிழமைமாலை விசுவாசப்பிரமாணஞ் செய்திருக்கின்றூர்.

### பண்ணைக்கடற்பாதை

பண்ணைத்தாம்போதியைப் பூர்த்திசெய்யும்விஷயமாய் இப்போது தீவிர கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. அதில் எஞ்சியுள்ளபகுதியைப் பூர்த்திசெய்யும்வேலை இம்மாதமுதல் துரிதமாக நடைபெற்றுவருகிறது. தாம்போதியிலே அசையும்பாலம் அமைக்கப்படவிருக்கும் பகுதியையடுத்து விசேஷவேலைகள் நடைபெறுகின்றன. அதேவேளையில் தாம்போதியில் எஞ்சியுள்ளபாகத்தைக் கற்கள்போட்டு நிரவும்வேலையும் நடைபெற்றுவருகிறது.

ST. PATRICK'S COLLEGE, JAFFNA.

**ADMISSIONS FOR 1960**

Entrance tests for the Primary and Secondary sections will be held on Saturday 14-11-59, at 9-30 a.m.

Applications should be made on forms available at the College Office before 7-11-59.

RECTOR.

# சுதேச வர்த்தமானம்

### மன்னுர் அரசாங்கஅதிபர்

மன்னுர் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிவந்த திரு. சி லூடிக்கின்ஸ் அவர்கள உதவி அரசாங்க அதிபராகக் கொழும்புக் கச்சேரிக்குமாற்றப் பட்டுள்ளார். இவரிடமாகக் கொழும்புக்கச்சேரியில் கடமையாற்றி வந்த திரு. ஜே வியனகே மன்னுர் அரசாங்க அதிபராக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றூர்".

### சோமராம தேரோ

காலஞ்சென்ற பிரதமர்பண்டாரநாயகாவைக் கொலைசெய்தவரெனக்கூறப்படும் தல்துவ சோமராமதேரோ இன்னும்பூரணமாகக் குணமடையவில்லையென்று சொல்லப்படுகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை நீதிஸ்தலத்தில் நிறுத்தப்படவிருந்தஇவர் பொலிஸாது மனுவின்பேரில 28-ந்திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறூர்.

### கந்தளாய்க்குளம்

நெடுநாள்மழைபெய்யாது ஏற்பட்டுள்ள கடுமவரட்சியாலே கந்தளாய்க்குளம் வற்றிப்போய்விட்டது. அதிலே எஞ்சியிருக்கும்தண்ணீர் குடிக்கமுடியாத நிலைமையில் இருக்கின்றது இந்தக்குளம் வற்றியிருப்பது அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டமாகும். பெரும போக நெல் வேளாண்மை அப்பகுதியிலும், கந்தளாய்க் குடியேற்றபகுதிகளிலும் நான்கில்ஒருபாகமும் இம்முறை நடைபெறுதென்று சொல்லப்படுகிறது.

### கோப்பாய்த்தொகுதித் தேர்தல்

தமிழரசுக்கட்சித் தலைவர்களில்ஒருவரான திரு சி. வன்னியசிங்கம்அவர்கள் காலஞ்சென்றமையால் பாராளுமன்றத்தில் காலியாயிருக்கும் கோப்பாய்த்தொகுதி ஸ்தானத்துக்கு நடைபெறவிருக்கும் உபதேர்தலுக்கான அபேட்சகர்களின் நியமனப்பத்திரங்கள் வருகிறகார்த்திகைமாதம் 12-ந் திகதியன்று யாழ்ப்பாணக்கச்சேரியில் சமர்ப்பிக்கப்படவேணடுமெனச் சென்றசனிக்கிழமை வெளியான அரசாங்கசெசற்அறிக்கை கூறுகின்றது.

### பம்பாய் வெங்காயச்செய்கை

அச்சுவேலிப்பகுதியில் பரீட்சார்த்தமாக நடைபெற்ற பமபாய் வெங்காயச்செய்கை கடந்தபோகத்தில் நல்ல பலன் அளித்திருக்கிறது. வழலாய், இடைக்காடு முதலாமிடங்களில உணவு உற்பத்திப் பிரசாரகர்கள் அளித்தஊக்கத்தினுல் முதன்முறையாகப் பம்பாய் வெங்காயச்செய்கையில் விவசாயிகள் சிலர் ஈடுபட்டனர். இவர்கள் இம்முறை கண்டுள்ள நல்லபலன் மேலும் பலரை அதில் ஈடுபடச் செய்திருக்கிறது. அதனுல இம்முறை ஐம்பது பரப்பிலே பமபாய்வெங்காயம பயிரிடப்பட்டுள்ளது. சின்னவெங்காயத்தின் எதிர்காலம்பற்றிய சந்தேகநிலை விவசாயிகளைப் பம்பாய்வெங்காயச் செய்கையில் கவனஞ்செலுத்தத் தூண்டிவிட்டிருக்கிறது.

### முதலாவது மரணதண்டனை

மரணதண்டனைநிறுத்தம நீக்கப்பட்டபின் முதலாவதுமரணதண்டனை கழுத்துறைச்சுப்பிறீங்கோட்டிலே அன்று வெள்ளிக்கிழமை விதிக்கப்பட்டிருக்கிறது. அத்தண்டனை விதிக்கப்பட்டதும் குற்றவாளியின் இனசனர் அழுதுபுலம்பினுர்கள். இந்தக்கொலை வழக்கிலே எம். ஆர்தர் பெர்னுண்டோ என்பவன் சென்றவருடம் மார்கழி மாதம சாள்ஸ் மெண்டிஸ்என்பவனைக் கொலைசெய்தவனென்று குற்றஞ்சாட்டப்பெற்றுக் கொலைக்குற்றவாளியாயினுன்.

### மந்திரிவிமலா விஜயவர்த்தன

முன்னர் சுகாதாரமந்திரியாய் இருந்துவந்து சிலமாதங்களின் முன் தலதாபனமந்திரியாக நியமனஞ்செய்யப்பெற்றிருந்த திருமதிவிஜயவர்த்தன மந்திரி பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாகப் பிரதமர் தஹநாயகா சென்றசெவ்வாய்க்கிழமைகாலை நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்கக்கட்சியின் விசேஷகூட்டம்ஒன்றில் தெரிவிக்கலாயினர். பிரதமர் பத்திரிகைகளுக்குப் போட்டிருந்த வாய்ப்பூட்டு—பத்திரிகைத்தணிக்கை பதினுன்குதினங்களுக்குப்பின் அதே கூட்டத்தில் அகற்றிவிடப்பட்டுள்ளது.

### சாராயத்தவறணை வேண்டுமாம்

பருத்தித்துறைப் பட்டினசபை எல்லைக்குள் சாராயத்தவறணையை மீண்டும் திறக்கவேண்டுமெனக்கேட்டு ஆயிரம்பேருக்கு அதிகமானோரது கைச்சாத்துகளைக்கொண்ட மனு ஒன்று அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. தவறணைமூடப்பட்டபின் பட்டினத்திலுள்ள பலதேநீர்க்கடைகள் சாராயத் தவறணைகளாக மாறிவிட்டனவென்றும், அவற்றிற்குவேண்டிய சாராயம் வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணமாகிய இடங்களிலிருந்தே பெரும்பாலும் வருகிறதென்றும் அந்த மனுவில் காட்டப்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

### காலநிலை

கடந்தசிலதினங்களிலே அதிகாலையில்வானம்கறுத்தும் சிறுதுமிகளுடன் நின்றுவிடுகின்றது. பலவிடங்களிலும் குளங்குட்டைகள், கேணிகள், கிணறுகள் வற்றியுள்ளன. கச்சான்சாற்று இன்னுமேஇடையிடையேவீசிக்கொண்டிருக்கிறது. விவசாயிகள் வயல்களைக் காலபோகவிதைப்புக்கு ஆயத்தஞ்செய்தும் மழைபெய்யாமையால் விதைக்கமுடியாது வானத்தை ஏறெடுத்தவண்ணம் இருக்கின்றூர்கள். ஆவணிமாதத்தில் நடைபெறும் காலபோக நெல்விதைப்பு ஐப்பசியாகியும் இன்னுமே நடைபெருததையிட்டுக் கவலைப்படுகிறூர்கள். புழுதிவிதைப்பும் பழுதாகும்நிலைமையில் இருக்கின்றது. சிலவிடங்களில் பருவமழையைவேண்டிக் கொடும்பாவிசட்டி இழுக்கப்பட்டுள்ளது.

## புனித பத்திரிசியார் கல்லூரி
### யாழ்ப்பாணம்.

இக்கல்லூரியின் அடுத்துவரும் வருஷத்துக்கான பிரவேசப்பரீட்சை (14–11–59) சனிக்கிழமை காலை 9-30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அதற்கான விண்ணப்பப்பத்திரங்களை எமது கல்லூரி அலுவலகத்திலே பெற்றுக்கொள்ளலாம். இப்பத்திரங்கள் நிரப்பப்பட்டு 7-11-59 சனிக்கிழமைக்கு முன் எமது கல்லூரி அலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

ச. நீ. அருள்நேசன், O.M.I.
அதிபர்.

## தமிழர்களும் பொதுத்தேர்தலும்

(ஆசிரியர் செ. சின்னத்துரை, B. A.)

தமிழர்களாகிய நாம் அளப்பரும் இன்னல்களுக் குள்ளாயிருக்கிறோம். இன்னும்எம்மை இன்னல்கள்பல எதிர் பார்த்துக்கொண் டிருக்கின்றன. வேலையில்லாத எஸ். எஸ். சி. மாணவர்குழாம் ஒருபக்கம், பட்டதாரிகளாகி வேலையில்லாதிருக்கும்குழாம் ஒருபக்கம், குடியிருக்க நிலமில்லாமல், போதியஉழைப்பில்லாமல்வாடும்சாரார் ஒருபக்கம். இவ்விதமான சூழ்நிலையில் அடுத்தபொதுத் தேர்தலில் யார்தானும்போட்டியிடுவது புத்திசாலித்தனமாஎன்பதைநாம்திட்டவட்டமாகப் பரிசிலனைசெய்யவேண்டும். போட்டியிடுவதிலே எத்தனையோலட்சம்ரூபாக்களை நாம் வீணுகச்செலவழிக்கிறோம். எமது அரியபொன்போன்ற நேரத்தையும், பாடுபட்டுத் தேடிய பணத்தையும், எமதுஅரியசக்தியையும் வீணுகச் செலவிடுபவர்களாகிறோம். இவற்றைச்செலவழித்து நாம்வசிக்கும் இடங்களில் அர்த்தமற்ற துவேஷத்தையும், தீயபொறுமையையும், இழிவான சூழ்நிலையையும் வளர்ப்பதேயல்லாமல் நாம் அடையும்பயன் பிறிது ஒன்றுமேயில்லை. நூற்றைம்பதுக்குக் கூடுதலான பிரதிநிதிகள்உள்ள சபையில் 25பேருக்குக் குறைந்த தமிழ்ப்பிரதிநிதிகள்போய்ச் செய்வதென்ன? ஐக்கியதேசியகட்சி அரசாங்கமும், மக்கள் ஐக்கியமுன்னணிக்கட்சி அரசாங்கமும் இந்தஉண்மையை நிரூபித்துள்ளன. எந்தஅரசாங்கம் அதிகாரபீடத்திற்குவரினும் தமிழர்களின் நிலைமை மாறுவதற்கு இடமில்லை. ஆகையால், தமிழர்களுக்கு ஒரேயொருகட்சிதான் இக்காலச்சூழ்நிலையில் தேவை. எமது அரிய இலட்சியங்களைப் பெறும்வரைக்கும் ஒருகட்சிதான் வேண்டும். நாம் ஒரேகுடும்பமாக வாழவேண்டும். போட்டியில் செலவழிக்கிற அரிய பொருளைக்கொண்டு நாட்டில் ஒரு தமிழ்ச் சர்வகலாசாலையையும், கைத்தொழிற்சாலைகளையும் தாபித்து, நாட்டை வளம்படுத்த வேண்டும். காடுகளை வெட்டி அவற்றைப் பயிர்செய்யும் நன்னிலங்களாக்கவேண்டும் இவைபோன்ற அவசியசேவைகள் பலவுள. இவற்றிலும்மேலான தேசத்தொண்டு ஒன்றுமில்லை. நாட்டை வளம்படுத்திக்கொண்டே மொழிஉரிமைகளைப் பெற நாம் முயலவேண்டும். எல்லாம்வல்ல ஆண்டவனே எமதுஇன்னல்களைப் போக்க வேண்டும். அவருக்கே எங்கள் உடல் பொருள், ஆவிமூன்றையும் அர்ப்பணித்து, எங்கள்கடமைகளை ஒருமைப்பாட்டுடன் ஆற்றவேண்டும். இப்படி நாம் ஒருமித்துச்செயலாற்றின் இறைவனே வழிகாட்டுவார். சிங்களச் சகோதரர்களை ஏசுவதிற் பிரயோசனமில்லை. அவர்களின் குறைகளை எடுத்துக்கூறுவதிலும் அடையும்பலன் ஒன்றுமில்லை. ஆகையால், எமதுகுறைகளை நாமே ஆராய்ந்து அவற்றை நிவிர்த்திசெய்து எமதுகடமைகளைச் செய்யவேண்டும். கடவுள் கிருபையால் வெற்றி வந்துசேருவது திண்ணம். எம்மிடத்தில் வேண்டப்படுவன ஒருமைப்பாடு, பண்பட்டஉள்ளம், அளப்பரும் சகிப்புத்தன்மை, குறையாத விடாமுயற்சி, எப்போதும் ஊற்றெடுக்கும் உணர்ச்சி, குன்றாதஒற்றுமையாகும்.

நாம சீரும்சிறப்பு முற்று வாழவேண்டுமானல்— நமது மொழிப்பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்க்கவேண்டுமானல் துவேஷங்களை மறந்து ஒருவர்மேல்ஒருவர் குற்றம்காணமல், சென்றகாரியங்களை மக்களுக்குஞாபகப்படுத்தி மக்களின் ஒற்றுமையைப் பிரிக்காமல் அடுத்துவரும் பொதுத்தேர்தலுக்குச் போட்டியில்லாமல் பிரதிநிதிகளை அனுப்பவேண்டும். இது முடியாதகாரியமென்றுநினைத்து உடனே உதறித் தள்ளவேண்டாம. முப்பதுவருடங்களாகவளர்ந்த ஒற்றுமையீனமும், இன்னல்களும் போதும! போதும்! முடியாதகாரியம் ஒன்றுமில்லை. வேண்டுவது மனமாற்றமும், கடவுள்பக்தியுமே. எழுமின்! விழிமின்!

"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு
ஒற்றுமைநீங்கில் அனைவர்க்கும்தாழ்வு"

## தென்னந்தும்புத் தொழிற்சாலை

பனைக்குச்சமீபமாக யாழ்ப்பாணம்– கண்டிவீதியிலே நீர்நிலைக்கருகாமையில் யந்திரசாதனங்களுடன் கூடிய தும்புத்தொழிற்சாலையொன்றை அமைக்க யாழ்ப்பாணப் பிரமுகர்கள்சபையொன்று தீவிரமுயற்சிசெய்துவருகின்றது. டக்டர் எஸ் தர்மலிங்கம் அவர்கள் தலைமையில இச்சபை இயங்கிவருகிறது. இப்போது தற்காலிக கட்டடவேலை ஆரம்பமாகியுள்ளது. தொழிற்சாலைப் பங்கு ஒன்று ஆயிரம்ரூபாவாகக் கொடுக்கப்படுகிறது. யாழ்ப்பாணக்குடாநாட்டிலே தென்னம்பொருட்களுக்குப் பனைப்பகுதிதான் மிகவும்பிரசித்தமானது.

* * *

● சீனாவின் அகந்தையை இந்தியா சகித்துக்கொண்டிருக்கமாட்டாது; பயமுறுத்துதலுக்கு அதுஒருபோதும் அடிபணியாதுஎன்று இந்திய பாதுகாப்பு மந்திரியான திரு. வி. கே. கிருஷ்ணமேனன் சென்றஞாயிற்றுக் கிழமை நியூயோக்நகரில் சீனாவைப் பற்றிநடைபெற்ற ரெலிவிஷன் ஒலிபரப்புஒன்றில் கூறியிருக்கின்றார்.

● கோவைநகரிலுள்ள ரிபான்டா ஆஸ்பத்திரியிலேபிரஞ்ஞை இன்மையை உண்டுபண்ணுகின்றஅதாவது— அறிவு கெடச்செய்கிற யந்திரமொன்று திடீரென வெடித்தகாரணமாக டக்டர் பிரான்சிஸ் பிறெற்றோ, டக்டர் எம். பி. போய்என்ற இருபிரபலசத்திரவைத்தியர்கள் உயிர்துறந்தார்கள். மற்றோர் சத்திரவைத்தியரும், ஓர்நேர்ஸும் கடூரகாயம் அடைந்தார்கள்.

● சீனர்கள் இந்தியஎல்லையில் ஊடுருவியகாரணமாக இந்தியகம்யூனிஸ்தகட்சியில் பிளவுஏற்பட்டுள்ளதாம். சர்வதேசகம்யூனிஸம்தவறிழைக்காதென்று கட்சியிலொருசாரார் மவுனஞ்சாதிக்க, மறுசாரார் சீனாவின் நடவடிக்கையை எதிர்ப்பதுமட்டுமன்றி நாட்டைப்பாதுகாக்க அரசாங்கத்துடன்சேர்ந்து போராடத்தயாராயிருக்கிறார்களாம்.

● மங்களூரிலே "இராமகாந்தி" என்ற சினிமாப்படமாளிகை 'பத்துக் கற்பனைகள்" என்ற சினிமாப்படத்தைத் திரையிட்டுவருகிறது. அதைப்பார்ப்பதற்காகத் தினமும் பன்னூற்றுக் கணக்கானமக்கள் அப்படமாளிகையை நோக்கிச் சரிந்தவண்ணமிருக்கிறார்கள். நாடுபுறங்களிலிருந்தும் மக்கள்வரத் தொடங்கியமையால் இந்தப்படம் அநேகவாரங்களுக்குத் தொடர்ந்து காண்பிக்கப்படவிருக்கிறது.

> **"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

## சகாய மாதாவின் சகாய மாலை



சிலகாலத்தின்முன்ஒருகுருவானவருக்குக் கிட்டவுள்ள வைத்தியசாலையிலிருந்துநடுச்சாமத்தில்ஒரு தெலிபோன்செய்திகிடைத்தது. ஒருகார்விபத்தில் அகப்பட்டஒரு மனிதர் காயவாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு மிகவும் அபாயமானநிலையில் இருப்பதாக அறியவந்தசுவாமியார் "அவர் கத்தோலிக்கனே" என்றுவினவினர்.

"நிச்சயமாக என்னல் சொல்ல முடியாது: ஆனல், அவருடைய சட்டைச்சாக்கொன்றில் ஒருசெபமாலை கண்டெடுத்தோம்" என்று தாதிஒருத்தி மறுமொழிசொன்னுள்

கால்மணிநேரத்துக்குள் குருவானவர் காயப்பட்ட மனிதரின் பக்கத்தில் வந்துசேர்ந்தார். அவருடையமுகமும், தலையும் உருத் தெரியாதபடி யிருந்தது. சத்திர வைத்தியர் சிகிச்சை செய்து கொண்டிருந்தார்.

தாதி செபமாலையைச் சுவாமியாருக்குக் காட்டினுள். அது அந்தமனிதரின் சட்டைப்பையில் இருந்ததாகத் தெரிவித்தாள். சுவாமியார் அதைக் கையிலெடுத்துப் பார்த்தார். மணிகள்— அதாவது செபமாலைக்கறகள் பலவருடபாவனையின் விளைவாகவாக்கும் நன்ருகத் தேய்ந்திருக்கக் கண்டார். அந்தமனிதர் கத்தோலிக்கர்என்பதற்குத் தக்கசான்று ஒன்றுமிருக்கவில்லை. ஆனல், செபமாலை வைத்திருந்ததினல் அவர் கத்தோலிக்கராக இருக்கக் கூடுமென்று எண்ணிக் குருவானவர் அவருக்கு அவஸ்தைப்பூசுதல் செய்தார்.

வைத்தியரும், தாதியும் தங்களாலான பிரயாசையெடுத்து அவரின் சரீர செளக்கியத்துக்காகப் பாடுபட்டார்கள். படுக்கையின் மறுபக்கத்தில் ஒரு ஆத்துமத்தை இரட்சிப்பதற்காகக் குருவானவர் திருச்சபையின் இறுதிச் சடங்குகளைச் செய்துகொண்டிருந்தார். அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் கொடுத்து முடியும் போது அந்த மனிதர் கண்களை முழித்துப் பார்த்தார். அவருடையசரீரம் சற்று அசைந்தது.

குருவானவர் அவர் பக்கமாகக் குனிந்து, நீர் ஓர் கத்தோலிக்கரா? என்று கேட்டார். அவர் உதடுகள் அடின. "ஆம்"என்று சொல்வதுபோலத் தோன்றிற்று. பாவசங்கீர்த்தனஞ் செய்யக்கூடிய நிலைமையில் அவர் இருக்கவில்லை. வைத்தியரும், தாதியும் சற்று வேலை விலகிநின்ருர்கள். குருவானவர் அவருக்குத் தேறுதலானவார்த்தைகள் சிலசொல்லிப் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் அருளினர். பின்பு அவருடைய செபமாலையை அவருக்குக் காட்டினர். அப்போது அது தன்னுடைய செபமாலை தானென்று அறியவந்தவர்போல மரணப் படுக்கையில் இருந்த அம்மனிதரின் முகத்தில் புன்னகை தோன்றியது. குருவானவர் செபமாலையை அவருடையகையில் கொழுவிவிட்டார். அதிலிருந்த குருசை முத்திசெய்யக்கொடுத்தார். ஐந்துநிமிஷங்களின்பின் அம்மனிதர் இறந்துவிட்டதாக வைத்தியர் தீர்ப்புக்கூறினர்.

சதாசகாயத்தாயாரின் செபமாலை அந்தமனிதரின் இரட்சணிய துறைக்குப் பிரவேசச் சீட்டாக இருந்தது. செபமாலைமட்டில் அவர் வைத்திருந்த பக்தி மரணவேளையிலே ஒரு குருவானவரின் சகாயத்தைக்கொண்டு வந்தது. மரியாயின் செபமாலை கத்தோலிக்க விசுவாசத்தின் அடையாளமாகக் காணப்பட்டது.

இந்தச் சம்பவம் மரியாய்க்கு அதிகம் உகப்பான செபமாகிய செபமாலையை நாம் எப்போதும் எங்களோடு வைத்திருக்கத் தூண்டவேண்டும். ஆபத்து வேளையில், அவசர காலத்தில், மரணத்தறுவாயில் அத்திருச் செபமாலை நமக்கு ஒருகுருவானவரின் உதவிகிடைக்க ஏதுவாயிருக்கக்கூடும்.

**செபமாலையை நேசிப்போமாக!**

**எங்கள் குடும்பத்தாருடன் அதைத் தினமும சொல்லுவோமாக!**

ஒன்ருய்ச் செபிக்கும் குடும்பம் எப்போதும் ஒற்றுமையாக நிலைத்திருக்கும்.

செபமாலைமாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### 400-ம் நோவனை

பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலில் சதாசகாய மாதாவின் 400-ம் நோவனைப் பக்திமுயற்சி இம்மாதம் 28-ந் திகதி புதன்கிழமை கொண்டாடப்படும். ஐப்பசிமாதம் 26-ம், 27-ம், 28-ம் திகதிகளில் பின்னேரம் 6மேணிக்குத் திரிதினஆராதனை நடைபெறும்.

குறித்ததினங்களில் காலை 6-15 மணிக்கு நோவனைசெய்வோரின் கருத்துகளுக்காகத் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கடந்த 399 கிழமைகளாகச் சதாசகாய மாதாவின் இரக்கத்தினலும், தவருத வேண்டுதலினலும் நாங்கள் பெற்றுக்கொண்ட ஆத்தும, சரீர நன்மைகள் இம்மட்டென்று சொல்லுந்தரமா?

மரியாயின்பிள்ளை நித்தியமாக ஒருபோதும் கெட்டுப்போகாது. நாம் பிள்ளைக்குரிய அன்புநேசத்தோடு அவவை அண்டுவோமாக! நாம்பெற்றுள்ள நன்மைகளுக்கு நன்றித்துதி கூறிக் குறித்த தினத்தில் அவவைப் போற்றிப்புகழத் திரண்டுசெல்வோமாக!

சதாசகாய மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

# நித்திய நகரமாகிய ரோமாபுரி

— லோகநாதன் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்தக் கொலோஸியத்தினுள் உள்ள 'கோதா'வும், அதன்சுற்றுப்புறக் கட்டடமும் 600அடிநீளமும், 500அடி அகலமும் உள்ளஇடத்தைக் கொண்டிருக்கின்றன. 'கோதா' அல்லது போரிடுவதற்கான அந்தஇடம்மாத்திரம் 285அடிநீளமும், 180அடிஅகலமும் கொண்டது. இந்தக்காட்சிஅரங்கத்தில் 80,000பேர்உட்கார இடவசதி இருந்ததென்று சொல்லுகிறார்கள். ஆனால்,45ஆயிரம்பேர்வரை தாராளமாக அமரமுடியுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக்கட்டடத்திலே பலஅடுக்குகள் இருந்திருக்கின்றன. மேலேறிச்செல்லப் படிக்கட்டுகளும் உண்டு.

இந்தப்பெரிய காட்சிஅரங்கத்தைக் கி. பி. 72-இல் வெஸ்பாஸியன்என்பவர் கட்டத்தொடங்கினாராம். ஆனால், அவரதுமகன் டைடஸினால்தான் இது பூர்த்திசெய்யப்பட்டதாம். ஜெருசலேமை ஜெயித்தபிறகு யூதகைதிகளைக்கொண்டு இப்பிரமாண்டமான காட்சிமாளிகையைக் கட்டிமுடித்ததாக வரலாறுதெரிவிக்கிறது.

வட்டவடிவமான இந்தப்பெரிய கட்டடம் இன்றுபாழ்பட்டுக்கிடக்கிறது. இக்கட்டடம் அழியத்தொடங்கியதும் இதிலிருந்து பலபொருட்களை எடுத்துச்சென்று ரோமாபுரியில் வேறுபலகட்டடங்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்திக் கொண்டார்களென்றும் சொல்லப்படுகிறது.

சீர்குலைந்திருக்கும் இப்பெரிய அரங்கத்தைச் சுற்றிப்பார்த்தேன். அப்பொழுது அரக்கர்குலத்தினரின் சிற்பியாகிய மயனின்ஞாபகம் எனக்குவந்தது. மயனைப்போன்ற பலசிற்பிகள் இந்தக்காட்சிமாளிகையைப் படைத்திருக்கவேண்டுமென எனக்குத்தோன்றியது. ஏனெனில், அது ஒருஇராட்சத முயற்சியேயாகும். சிதைந்துபோயிருக்கும் இந்தஅரங்கத்தை நமது கற்பனையினால் நிறைவுபடுத்திப் பார்க்கும்போது பிரமிப்பும், வியப்பும் தோன்றவேசெய்யும். ஆனால், அது எதற்காகப் பயன்பட்டதென்பதை வரலாற்றில் படிக்கும்போது, நமதுஉள்ளத்தில் வெறுப்புத்தோன்றாமலிருக்காது. ஏனெனில், ரோமாபுரிமன்னர்களும், பிரபுக்களும் குரூரச்செயல்களைச்செய்து, அவைகளைக் காட்சியாக எண்ணிக் குதூகலித்த பயங்கரமான அரங்கம்அது. அந்தக்காலத்தில் பல்லாயிரக்கணக்கான ரோமாபுரிமக்கள் குரூர காட்சிகளைக்கண்டு ரசிக்கும்படி செய்திருக்கிறார்கள். அக்குரூரக்காட்சிகளை நினைத்தாலே நமதுமனம் திடுக்கிடும். ஆமாம், ரோமாபுரிச் சக்கிரவர்த்திகளும், இராணிகளும், பிரபுக்களும் அந்தஅரங்கத்தில் மனிதர்களைத் துஷ்டமிருகங்களுக்கு முன்விட்டுச் சாகும்வரை சண்டைபோட வைத்து, அந்தக்கொடிய காட்சியைக்கண்டு களிப்படைந்திருக்கிறார்கள். இந்தக் கொடூரத்தை ரசிக்கும்படி அந்தக் காட்சிமாளிகையில் 40அல்லது50 ஆயிரம்பேர்வரை உட்கார்ந்திருப்பார்களாம். இன்னும் முதன்முதலாகக் கிறீஸ்துமதத்தைப்பின்பற்றத் தொடங்கியவர்களைஎல்லாம் கொண்டுவந்து "கோதா"வில்தள்ளித் துஷ்டமிருகங்களை ஏவி, அவர்களைக்கொன்றஇடமும் இதுதானும். இவ்வரலாற்று நிகழ்ச்சிகளை நினைக்கும்போது 'கொலோஸி,யத்தின் கம்பீரமும், அழகும் என்முன் மங்கிவிட்டன. குரூரமானமுறையில் சிந்தப்பட்ட பலரின்இரத்தக்கறை அக்கட்டடத்தின் மண்ணிலே, சுவரிலே, படிக்கட்டுகளிலேஎல்லாம் படிந்திருப்பதாகவே எனக்குத்தோன்றி என் உள்ளத்தை உலுக்கியது. சுகபோகம் எல்லைமீறும்போது மனிதப்பண்பு மறைந்து குரூரத்தைரசிப்பதிலும் ஒரு குதூகலம் தோன்றும்போலும்

ரோமாபுரியிலுள்ள அதிகம்புராதனமான ஆலயம்இதுதான். இன்றும் நல்லமுறையில் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. இது ரோமைநகரில் கிறிஸ்தவமதம் பரவுவதற்குமுன் எழுப்பப்பட்ட மிகப்பெரியகோயிலாகும். பழைய ரோமாபுரியின் ஒப்பற்றசின்னமாக இது திகழ்கிறது. கி. மு .27-இல் இந்த ஆலயத்தை மார்க்ஸ் அக்றிப்பாஎன்பவர் கட்டினார். பின்னர் இது சேதமுற்றதென்றும், கி. பி. 120-க்கும், 130-க்கும்இடையிலே இக்கோயிலை அதிரியன்என்பவர் மீண்டும் புதுப்பித்தாரென்றும் சரித்திரம்அறிவிக்கிறது.

இந்தக்கோவிலின் வாயிற்பக்கத்திலுள்ளகம்பங்கள் மிகப்பெரியன. அவைகளின்அடியில் நிற்கும்போது நாம்உருவில் மிகவும்சிறியவர்களாக மாறிவிடுவதுபோல் தோன்றுகின்றது. அக்கம்பங்களின் சுற்றளவும், உயரமும் கம்பீரத்திற்குக் கம்பீரம் அளிப்பதுபோலவேகாட்சிஅளித்தன. "பான்தியோன்" கோவிலுள் சென்றதும் மலைப்பும், வியப்பும் கூடிவிடுகின்றன. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ரோமாபுரி கட்டடக்கலையில் எத்தகைய உயர்வைப் பெற்றிருந்ததென்பதற்கு இன்றும் இணையற்ற சான்றாக இக்கோயில் விளங்குகிறதென்பதில் ஐயமில்லை. இதன் வில்மச்சு அமைப்பு அற்புதமானது. வில்மச்சின் உச்சியின் மத்தியபாகத்தில் வட்டமாக ஒருபெரிய திறந்தவெளி காணப்படுகிறது. அதன்வழியாக உள்ளே சூரிய ஒளிபடர்கிறது. அதன்குறுக்களவு 27அடி. இக்கோயிலின்உயரம் 142 அடி. உள்ளே சலவைக்கற்களின் வேலைப்பாடுகள் நமதுகண்களைக் கவருகின்றன. 19-வதுநூற்றாண்டில் இத்தாலியமன்னர்களின் சமாதிகள் இக்கோயிலில் இடம்பெறத்தொடங்கின. இங்கு பிரசித்திபெற்ற கலைஞர்றப்பாயேலின்கல்லறையும் இருக்கிறது. தொடக்கத்தில் பலகடவுள்களுக்குரிய கோயிலாகவே இது கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அகண்டரோமாபுரியின் ஒருபகுதி வத்திக்கான் நகராக விளங்குகிறது. பாப்பாண்டவர் வசித்துவரும் புனிதஸ்தலம் இதுதான். இங்குதான் வத்திக்கான்அரண்மனை சுமார் 55,000 சதுரயார்அளவுக்கு வியாபித்திருக்கிறது. இங்கு 1,400 சிறிய, பெரிய கூடங்களும், அறைகளும் இருக்கின்றன. அவைகளில்பல புத்தகசாலைகளாகவும், பொருட்காட்சிமண்டபங்களாகவும் இப்பொழுது காட்சிஅளிக்கின்றன. குறிப்பிட்ட சிலஅறைகள் மாத்திரம் பாப்பாண்டவரின் உபயோகத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

வத்திகான் பொருட்காட்சிசாலை நமதுகண்களை வியப்பால் மலரவைக்கின்றது. அதுபெரிய பொருட்காட்சிச்சாலையாக அமைந்துள்ளது. அங்கு விலையேறப்பெற்ற ஆபரணங்களும, இன்னும் வேறுபல அபூர்வமான பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. எகிப்துநாட்டின் பண்டையபொருட்கள் நிறைந்த தனி அறையும் அக்காட்சிச்சாலையில் இருக்கிறது. கெடாமல் பாதுகாக்கப்பட்ட புராதீனஎகிப்திய மனிதஉடல்களையும் அப்பகுதியில் வைத்திருக்கிறார்கள். பொதுவிலே வத்திக்கான்பொருட்காட்சிச்சாலை ஐஸ்வரியம்நிறைந்த ஓர்அற்புதம்என்று சுருக்கமாகக் குறிப்பிட்டுவிடலாம். (வளரும்)

# ருஷியாவுக்கு அல்ல, எமக்கே

— மொன்சிஞ்ஞோர் காசெல்லா சுவாமிகள் —

(முன் தொடர்ச்சி)

தமது நான்காவதுகாட்சியில் பாத்திமாதாயார் ருஷியாவுக்கு எச்சரிக்கையாகவோ அன்றேல் புத்திமதியாகவோ கருதக்கூடிய யாதொன்றும் சொல்லவில்லை. ஐந்தாவதுகாட்சியின்போது, யுத்தத்தின் முடிவுக்காகச் செபமாலையைத் தொடர்ந்துசொல்லும்படியாய்த் தமது நம்பிக்கைக்குப் பாத்திரரான மூன்றுபிள்ளைகளுக்கும் தேவதாயார் புத்திமதிகூறினர். இதிலும் ருஷியாவைப்பற்றி அவர்குறிப்பிடவில்லை.

தம்முடைய ஆறாவதுகாட்சியான ஈறாந்த காட்சியின்போது பாத்திமாநாயகி சாற்றியதாவது: "செபமாலைநாயகி நாமே. விசுவாசிகள் தங்கள் சீவியத்தைத் திருத்தவேண்டுமென்றும், தங்கள்பாவங்களுக்காக மன்னிப்புக்கேட்க வேண்டுமென்றும் அவர்களை எச்சரிக்க நாம்வந்திருக்கிறோம். ஏலவே அத்துணை ஆழமாக மனமடிந்துபோயிருக்கும் நமது ஆண்டவருக்கு அவர்கள் இனிமேலும் துரோகம்செய்யாதிருக்கவேண்டும். அவர்கள் செபமாலை சொல்லவேண்டும்."

இதிலிருந்து உலகத்திற்குச் சமாதானத்தைக் கொண்டுவரும் திட்டத்தில் ருஷியாவைப்பற்றித் தேவதாயார் யாதொன்றுமே கேட்கவில்லையென உற்றறிந்துகொள்ளலாம். சமாதானத்தைக் கண்டடைவதற்கான பொறுப்பையெல்லாம் அகிலமுழுவதிலுமுள்ள ஏனையவர்மீதே — பிரதானமாய் என்னிலும், உங்களிலுமே அவர் சுமத்தியிருக்கின்றார்,

மேலும் சோவியற் சக்கிராதிபத்தியத்திலிருந்து உலகசமாதானம்வருமென்று சிந்தித்து, அந்தச்சமாதானத்தை எதிர்பார்ப்பவர்களும் இருக்கின்றார்கள். ருஷியாவிலிருந்துஅல்ல, ஆனால், உலகின் ஏனையபகுதியிலிருந்துதான் உலகசமாதானம் வரமுடியுமென்ற உண்மைபற்றி விவாதிக்கஇவர்கள் மறுக்கிறார்கள். உலகிற்குச்சமாதானத்தைத்தாம்அருளுமுன் அதுதிருந்தவேண்டுமென்று தேவதாயார் ருஷியாவை வேண்டிநிற்கவில்லையென்பதை இவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ருஷியகிறெம்லினின் கொடுங்கோலர்களை இவர்கள் துவேஷித்து, இகழ்ந்து "வெட்கம், வெட்கம்"எனக் கதறி ஆர்ப்பாட்டங்கள்செய்கிறார்கள். ஆயின் இந்த ஆர்ப்பாட்டங்களால் இவர்கள் கண்ட பலன்யாது? ஒன்றுமேயில்லை. "நீங்கள் பிசாசை வெட்கமடையப் பண்ண முடியாது"என்ற முதுமொழியை இவர்கள் கேட்டதில்லையா?

பாத்திமாநாயகி தமதுசெய்தியிலே "குற்றமற்றமக்களை நீங்கள் சிறைவைப்பதை நிற்பாட்டவேண்டும்", "உங்கள் கொலைத்தண்டனைக்கு முடிவுகட்டவேண்டும்", "திருச்சபையையும், அதன் குருமாரையும் துன்புறுத்தி நடத்தும் வேதகலாபனைகளுக்கு நீங்கள் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்" என்று ருஷியாவுக்குச் சொல்லியிருக்கிறாரா? எங்காவது அப்படிச்சொல்லவில்லை.

இன்னும்கிறெம்லினிலுள்ள பைசாசகுணம்படைத்த மனிதர்களுக்கு நீடிய குறிப்புகள் வரைகிறோம். நீண்டகடிதங்கள் எழுதுகிறோம். மனம்மாறவேண்டுமென்று அவர்களுக்குச்சொல்லுகிறோம். ஐக்கியநாடுகளின் பொதுச்சபையிலே அவர்களுடன் மல்லுக்கட்டுகிறோம். அவர்கள் எங்கேபிழை, நாம் எங்கேசரியென்பதை அவர்கள்அறிந்துகொள்ளுமாறு வருந்திமுயல்கிறோம். வாதுபண்ணுகிறோம். "நீங்கள் இதைச் செய்தாலன்றி மற்றப்படி பயங்கர ஆபத்து வந்துசூழும்"என்று நாம் கூறுகிறோம்.

ஆனால், ருஷியா அகிலமுழுவதையும் தனது அதிகாரத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று தான்கொண்டுள்ள நிர்ணயத்தில் ஒருஅங்குலம் தானும் அடிபெயர்ந்திருக்கிறதா? கடந்தவாரங்களிலே அதன்செயல்கள் கடந்தகாலங்களிலே அதுசெய்துள்ள பிழைகளைக் காட்டிலும் இன்னும்அதிகம் துவேஷிக்கப்படத்தக்கன. ஆட்டுத்தோலைப் போர்த்தஓநாய்போன்று தனதுபாசாங்கான பொய்வேடத்தைக் களைந்துவிட்டு அதுவெளிப்படவேண்டுமென்று நாம்ஆசிக்கின்றோம். ருஷியாதனதுமாசு மறுக்களைப் போக்கவேண்டுமென்று நாம்ஆசிக்கின்றோம். ருஷியா தனது குற்றங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கோர வேண்டுமென்று நாம்ஆசிக்கின்றோம். இயலாதகாரியத்தை அடைந்துகொள்ளுமாறு நாம்வருந்திப் பிரயாசைப்படுகிறோம். கைகூடுவதாயில்லை. அதனால், மஸ்கோவிலிருந்து நமது கண்களைத்திருப்பிப் பாத்திமாநாயகியின்பக்கமாகத் திரும்புவோம். சமாதானத்தைக்கண்டடைய அவர் காட்டியுள்ளபாதையிற் செல்லுவோம்.

---

## 12-ம் பத்திநாத பாப்பானவர் அர்ச்சியசிட்டராகலாம்

பரமபதமடைந்த 12-ம் பத்திநாத பாப்பானவர் ஓர்அர்ச்சியசிட்டவராகப் பிரகடனஞ் செய்யப்பட வேண்டுமென்ற பொதுசனவிருப்பத்தைத் திருச்சபை "கருத்தாகஊன்றிச் சிந்திக்கிற"தென்று "ஒசேர்வாத்தோறே ரோமானோ"என்ற வத்திக்கான் இராச்சிய பத்திரிகை சென்ற 14-ந்திகதி புதன்கிழமை தெரிவித்திருப்பதாக அங்கிருந்து மறுநாள் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. அவர் "திருச்சபையின் வித்தியாபாரக"ராகப் பிரகடனஞ் செய்யப்படக் கூடுமென்று அப்பத்திரிகை முதன்முறையாகக் குறிப்பிட்டிருக்கிறது. திருச்சபைத் தலைவரான ஓர்பாப்பானவராய் இருந்தபோதிலும் தீர்க்கமான விசாரணை நடத்திமுடித்து அதிகாரபூர்வமாகப் பிரகடனஞ்செய்யக் குறுகிய காலமோ அல்லது நீண்டகாலமோ திருச்சபைக்கு வேண்டியிருக்குமென்று அப்பத்திரிகை அழுத்தமாகத் தெரிவிக்கின்றது.

---

● பாடசாலைகளின் ஆசிரியர்களும், மாணவர்களும் அரசியலில்ஈடுபடுவதை மலாயாஅரசாங்கம் தடைசெய்துள்ளதென்று அதன்கல்விமந்திரி சென்ற 6-ந்திகதி தெரிவித்திருப்பதாகக் கோலாலம்பூரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. சிலஆசிரியர்கள் வெறுப்புணர்ச்சியைப் போதித்துவருகின்றனரென்றும், கிராமப்பகுதிகளில் அவர்கள் மக்களிடையே ஒற்றுமையின்மையை உண்டுபண்ணக்கூடிய ஆபத்து இருக்கிறதென்றும் அவர்கூறியிருக்கின்றார்.

# புனிதவீரர் பக்கம்

அருமைச் சகோதரங்களே!

உங்களுக்கு ஒரு சுபசெய்தி! புனிதவீரர்களாகிய உங்கள் அரசர்தினம் வருகிறது. ஐப்பசி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை கிறீஸ்துராசா தினம். அது உங்களுக்கு மகிழ்ச்சிக்குரிய தினம். எல்லோரும் ஆரவாரமாக, ஆடம்பரமாக அத்தினத்தைக் கொண்டாடுங்கள்.

அரசருக்குரிய சங்கை, மரியாதையைக் காட்டவேண்டியது வீரர் கடனாகும். நீங்கள் கிறீஸ்து தேவ அரசரின் புனிதவீரராதலால் தேவஅரசருக்குக் காட்டவேண்டிய வணக்கமும், மகிமையும் பெரிதல்லவா? இன்று மோட்சத்திலே சர்வ வல்லமையோடு வீற்றிருந்து சகல உலகங்களையும், சந்திர சூரியரையும் தமது கரங்களில் ஏந்தி ஆண்டுவரும் அவர் உலகமுடிவிலே நம்மை நடுத்தீர்க்க வருவார். அப்போது நாம் அவரது நீதிஆசனத்தின்முன் நிற்போம். ஒன்றில் அவரால் ஆசீர்வதிக்கப்படுவோம், அன்றேல் சபிக்கப்படுவோம்.

வீரர்களே! கிறீஸ்து அரசரின் இராச்சியத்தில்—மோட்சத்தில் நாம் சேரும்படி அனுதினமும் மன்றாடிவாருங்கள். இவ்வுலகிலே அவரது இராச்சியம் பரவ எம்மால் இயன்ற முயற்சி செய்வோம்.

கிறீஸ்து அரசர் தினத்தில் அவருக்கு மகிமை செய்வது எப்படி? உங்கள் வீட்டிலே கிறீஸ்து இராசாவின் படத்தை ஸ்தாபித்து, அவரது ஆளுகையிலே உங்கள் குடும்பங்களை அர்ப்பணியுங்கள். இதுவரை அப்படிச் செய்யாவிட்டால் உங்கள் பெற்றோரிடம் அதை இத்தினத்திலே செய்யும்படி தூண்டுங்கள். சகல வீடுகளிலும் கிறீஸ்துஇராசா அரசாட்சி செய்யவேண்டும். இந்த இலட்சியம் கைகூடினால் முழு உலகமும் அவரது குடைநிழலில் இளைப்பாறும். கிறீஸ்து இராச்சியம் வருக! கிறீஸ்து இராசாவுக்கு ஜே!

அண்ணா

—✻—

## அன்னையின் அன்பளிப்பு

அன்னையின் அன்பிற்கு ஒத்தஅன்பு எங்குமேயில்லை. பரிசுகளிலெல்லாம் சிறந்ததாகிய அன்புப்பரிசை நமக்கு அளிப்பதற்காக எதையும் தியாகம் செய்ய அவ தயங்குவதில்லை.

பரலோக அன்னையாம் எங்கள் மரியாயி இத்தகைய இருபெரும் பரிசுகளை எங்களுக்கு அளித்திருக்கின்றா. அவவுடைய விலைமதிக்கப்படாத பொக்கிஷமெனத்தகும் தேவகுமாரனாகிய திவ்விய இரட்சகர் அவ எங்களுக்கு அளித்த முதல் பரிசு.

மரியாயி சிலுவையின் அடியில் நின்ற மேரையாக இந்தப் பரிசை எங்களுக்கு அளித்துப் 19 நூற்றாண்டுகளுக்குமேல்கடந்துவிட்டன. இத்தனை நூற்றாண்டுகளாக இப்பரிசு எங்களோடு கூடவே இருந்து வருகின்றது. அல்லும் பகலும் அவவுடைய திருக்குமாரன் அன்பின் தேவதிரவிய அனுமானத்தில் எங்களோடுகூட இருக்கின்றார் அல்லவா?

இவ்வுலகில் திவ்விய யேசுவோடு நாங்கள் மெய்யாகவே சீவிப்போமாகில் எவ்வளவு பரிசுத்தம் உள்ளவர்களாய் இருப்போம்! எங்கள் சீவியம் எத்தகைய ஆனந்தசாகரமாய் இருக்கும்! ஏனெனில், "வழியும், உண்மையும், வாழ்வும் நாமே" என்று திவ்விய இரட்சகர்தாமே திருவாய்மலர்ந்தருளினார். இவரே எங்கள்பரலோக அன்னை எங்களுக்கு அளித்த விலைமதிக்கப்படாத முதல் பரிசு.

செபம் ஒன்றே எங்களையும், சகல மக்களையும் பரமபதம் சேர்க்கச் சிறந்தவழி என்பதை மரியாயி நன்கறிவா. எனவே, அவ எங்களுக்கு அளித்த இரண்டாவது பரிசு உத்தமமான செபம் — உன்னதமான செபம். அதாவது குடும்ப செபமாலை.

ஓர் இல்லத்தில் தாயும், தந்தையும், சகோதரர் சகோதரிகளும், ஒருமிக்கக்கூடி அமைதிசூழ, பணிவோடு ஆண்டவரை நோக்கிக் குரலெழுப்பும் முகமாய்க் குடும்ப செபமாலை செபிப்பதைக் காட்டிலும் இரம்மியமான காட்சி இப்பூவுலகில் வேறு எதுவும் உண்டா? அந்த இல்லத்திலும், அவர்கள் இருதயங்களிலும் இவ்வுலகம் அளிக்கக்கூடாத சாந்தியும், சமாதானமும், சந்தோஷமும் குடிகொள்ளுகின்றன.

இலட்சக்கணக்கான இல்லங்களில் குடும்பசீவியம் குலைந்து பாழ்படுவது எத்தகைய பரிதாபத்துக்குரிய காட்சி! இல்லத்தில் இன்பம் பொழியும் பாக்கியத்தை இழந்து இவர்கள் பரதவிக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம், இவர்கள் இன்னும் எங்கள் பரலோக அன்னையின் இரண்டாவது பரிசை ஏற்றுக் கொள்ளாததே. இதுதான் குடும்ப செபமாலை என்னும் பரிசு.

அன்னையின் பரிசுகள் வாழி!

அ. யோ. புவனேஸ்வரன்,
அர்ச். என்றியரசர் கல்லூரி,
இளவாலை.

### நண்டின் 62 மைல் பிரயாணம்

பிரான்ஸ் தேசத்தின் கரையோர மீன்பிடிகாரர் சமீபத்தில் ஒரு நண்டைப் பிடித்தனர். அதன் முதுகு ஓட்டிலே 'ஜொப்லே ரேக்ஸ்' என்ற பெயர் எழுதப்பட்டிருந்தது. 50 வயதுடைய யோசவ்–லே–ரேக்ஸ் என்பவர் தான் அதை 30வருடங்களுக்கு முன் பிடித்துத் தன்பெயரை அதன் முதுகிலே பொறித்துவிட்டதாகக் கூறுகிறார். நடக்கும்தன்மையுடைய இந்த நண்டு முன்பு விடப்பட்ட இடத்திலிருந்து 30 வருடங்களில் பக்கப்பாட்டிலே (சரிவு பக்கமாய்) சுமார் 62 மைல்தூரம் நடந்துசென்றது அதிசயம் இல்லையா? அதுவும் ஒருநண்டு 30 வருடங்கள் சீவித்தது பெரும் அதிசயம்தானே!

## பிரான்சீஸ் செய்த பிரதிக்கினை

எனது பெயர் பிரான்சீஸ். வயது ஒன்பது. நான்காம் வகுப்பில் படிக்கின்றேன். எனக்கு ஒருஅக்கா இருக்கின்றா. அவ புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிப்பதில் ஆர்வமுள்ளவ. வாசித்ததன்பின் எங்களுக்குக் கதை கதையாகச் சொல்லுவா. எங்களுக்குத் தினமும் படுக்கப்போகுமுன் ஒருகதையாவது கேட்காவிட்டால் நித்திரையே வராது. ஜசிந்தா, பிரான்சீஸ், லூசியாவைப் பற்றிச் சொல்வதில் அவவுக்குப் பிரியம் அதிகம். நாங்களும் ஆவலுடன் கேட்போம். நான் ஏதும் குழப்பம் செய்தால் அல்லது கீழ்ப்படிய மறுத்தால் ஒன்றுமே சொல்லமாட்டா. ஆனால், பிறகு தனிமையாக அழைத்துப் போய், "அருமையான ஒரு சந்தர்ப்பத்தை இழந்துவிட்டாயே; உனக்கு விருப்பமில்லாவிட்டால் அதை ஆண்டவருக்காகச் செய்திருக்கலாமே; செய்கிறது செய்கிறதுதானே; அதை நல்ல மனதுடன் செய்தால் என்ன? ஜசிந்தாவின் சகோதரன் பிரான்சிஸைக் கண்டு பாவித்தாகிலும் நீ திருந்தக்கூடாதா?" என்று சொல்லி என்னை முத்தமிடுவா.

ஆண்டவருக்காக, ஆண்டவருக்காக என்ற அக்காவின் ஓயாத நச்சரிப்பு என்உள்ளத்தில் ஒருவித ஏக்கத்தைத் தூண்டிவிட்டது. நானும் ஆண்டவருக்காக ஏதும் செய்யத்தான் வேண்டும் என்ற ஆவல் நாளுக்குநாள் என் மனதில் வளர்ந்து கொண்டு வந்தது. அம்மூன்று பிள்ளைகளும்செய்ததுபோல் நானும் பாவிகளுக்காக மன்றாடவேண்டும்; பாப்பாண்டவருக்காக வேண்டிக் கொள்ளவேண்டும்; ரூஷியாவை மனந்திருப்பவேண்டும்; சீனாவில் வேதகலாபனை அமரவேண்டும்; உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்கள் மோட்சகரை சேரவேண்டும்; வேதபோதகர்கள் அதிகரிக்கவேண்டும்; எங்கள் வேதத்தை விட்டுப் பிரிந்திருக்கிறவர்கள் எங்கள் மந்தையில் திரும்பவும் வந்து சேரவேண்டும்; ஆண்டவருக்கும், மாதாவுக்கும் ஆறுதல் உண்டாக்கவேண்டும்; இன்னும் என்னென்னத்துக்கோ எல்லாம் செபிக்க வேண்டுமென்று கொள்ளை ஆசை. ஆனால், அதற்குரிய சுறுசுறுப்புத்தான் என்னிடம் இல்லை. ஒருநாளைக்கு ஏதோ சில கருத்துகளுக்காக ஒரு பரமண்டலமந்திரம் மாத்திரம் சொல்லுவேன். என்றாலும், எனக்குச் செபிக்கத்தெரியாது. செபிக்கத் தெரியாத எனக்கு இவைகள் எல்லாவற்றிற்குமாகச் செபிக்க முடியுமா? எப்படிச் செபிப்பது? என்னென்று அதை வழக்கத்திற்குக்கொண்டுவருவது என்று யோசிக்கலானேன்.

ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம், ஆசீர்வாதம்முடிந்ததும் வீட்டிற்குப் போகாமல் கடற்கரைக்குச் சென்றேன். வீட்டில் நான் ஏதும் செய்யாமல் யோசித்துக்கொண்டு இருந்தேனென்றால் அக்கா ஏசுவா. அதனால்தான் கடற்கரை சென்று ஒரு மறைவான இடத்தில் அமர்ந்தேன். "ஆண்டவரே! நீர் விரும்புகிற எல்லாம் செய்ய வேண்டுமென்று எனக்கு மெத்த விருப்பம். ஆனால், நான் சிறு பையன்; எப்படிச் செய்வது என்று தெரியவில்லை; எனக்குச் சற்று உதவி செய்தருளும்" என்று மன்றாடினேன். என் மனம் இவ்வார்த்தைகளை உச்சரித்தாலும் என் கண்கள் என் வகுப்பில் படிக்கும் சேவியர், இராசா, ஆனந்தன், அமலன் எல்லோரையும் கண்டுகொண்டன. அவர்களுடன் விளையாடுவதற்காக எழுந்து சென்றுவிட்டேன்.

அடுத்தநாள் காலை அக்கா தனது கையில் ஒரு கொப்பியுடன் வந்தா. "பிரான்சிஸ்! இதென்னடா இது? ஏதோ எழுதி வைத்திருக்கிறாயே; எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்றா. நான் குனிந்ததலை நிமிராது மௌனமாய் நின்றேன்.

"என் பிரான்சிஸின் பிரதிக்கினை என்னை மேன்மேலும் ஆண்டவருக்காகப் பாடுபடச் செய்யும்" என்று சொல்லி என் கன்னத்தில் தட்டிவிட்டு அம்மா கூப்பிடவே சென்றுவிட்டா. அக்கா வைத்துவிட்டுப் போன கொப்பி என்முன் காட்சி அளித்தது. அதை என் கண்கள்

(அடுத்தபக்கம் பார்க்க)

### உங்களுக்குத் தெரியுமா?

By Scio



[1] சாதாரணமாக ஒருபெண் ஆடவன் ஒருவனைக் காட்டிலும் மூன்றில் ஒருபங்கு தீவிரமாகச் சுவாசிக்கின்றாள்.

[2] கம்யூனிஸ்தர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் கம்யூனிஸ்தர்களே. அவர்களின் அமைச்சலெல்லாம் மஸ்கோவுக்கே. அவர்களின் இலக்கு முழுவதும் சுதந்திர அரசாங்கங்களைக் கவிழ்ப்பதே.

[3] உங்களுடைய கண்கள் திறந்தபடியிருக்கத் தும்முவது முற்றுமே இயலாக் கருமமாகும்.

திரும்பவும் கவனித்தன.

**பிரான்சீஸின் பிரதிக்கினை**

ஞாயிறு: உண்ண உணவும், உடுக்க உடையும், படிக்கப் புத்தகமும் தந்து என்னைக் காப்பாற்றி வருகிற என் ஆண்டவருக்குப் பிரதி நன்றியாக என் வேலைகளைச் செய்வேன். துன்ப வருத்தங்களை நல்ல மனதுடன் சகிப்பேன். சின்னஞ் சிறிய ஒறுத்தல்கள் செய்வேன்.

திங்கள்: உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமங்களுக்காக.

செவ்வாய்: எங்கள் ஊரில்உள்ள பாவிகள் மனந்திரும்பும்படியாக.

புதன்: எனது சொந்தப் பாவங்களுக்குப் பரிகாரமாக.

வியாழன்: சின்ன யேசுவுக்கு நிந்தைப்பரிகாரமாக.

வெள்ளி: எங்கள் ஊரில் எங்கள் வேதத்தை விட்டுப் பிரிந்துபோய் இருப்பவர்கள் திரும்பவும் எங்கள் மந்தையில் சேரும்படியாக.

சனி: மரியாயின் மாசற்ற இருதயத்திற்குச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக.

நான் ஒவ்வொரு நாளும் நித்திரை விட்டு எழுந்ததும் "பிரான்சீஸ் செய்த பிரதிக்கினை" யை மறவாமல் "ஆண்டவரே! என்னை ஏற்றருளும்; இன்றைக்கு நான் செய்வதை, படிப்பதை, விளையாடுவதை, வேலைகளை, படும் துன்பவருத்தங்கள் யாவற்றையும் இன்ன கருத்திற்காக ஒப்புக் கொடுக்கிறேன் என்று சொல்லாமல் படுக்கையைவிட்டு எழுந்திருப்பதே இல்லை. இப்பொழுது எனக்கு அதிகம் அதிகம் ஆண்டவருக்காய்ப் பாடுபட வேண்டும்போல் இருக்கின்றது.

---

## நல்ல பிள்ளையாய் வாழ்வதற்கு

[அ. ம. யோ. பெர்னண்டோ, கொழும்பு.]

உயர்ந்த பொருளைத் தந்தாலும்
உலகே திரண்டு வந்தாலும்
உயிரே போக நேர்ந்தாலும்
உரைக்க வேண்டாம் பொய்யதனை.

●

கையிற் பணமே ஒழிந்தாலும்
கனத்த பசியே வந்தாலும்
கண்ணுக் கழகாய் இருந்தாலும்
கருத வேண்டாம் களவுதனை.

●

வயதில் மூத்த பெரியார்க்கும்
வளர்க்கும் தாயார் தந்தையர்க்கும்
வாய்மை உள்ள குருவுக்கும்
வணக்கங் கூற மறவாதே.

●

உள்ளார் இல்லார் என்பார்க்கும்
உருவில் சிறியார் பெரியோர்க்கும்
உயர்வு தாழ்வு எண்ணுதே
ஒன்றே நீதி மறவாதே.

---

அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



**கேட்ட நன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்**

யாழ்ப்பாணம்: எல். மேரி மாகிறேற் 1-75, மிசெஸ் ஏ. பிரான்சீஸ்பிள்ளை 2-00 —பற்ருன: எவ். போல் 5-00 —கம்பளை: மிசெஸ் ஏ. டி சேவியர் 6-00 —கொழும்பு: மிசெஸ் ஏ. பொன்னையா 10-00, ஜி. அந்திரேஸ் 3-00—அல்வாய: ஏ. பிலோமினு 2-00 — டிமபோடிரு: பி. எவ். சூசைப்பிள்ளை 1-00 — மஸ்கேலியா: எம். நீக்கிலாப்பிள்ளை 2-00 — நீர்கொழும்பு: எம். எஸ். யோசவ் 5-00, எஸ். ஜி செல்லத்துரை 1-00, ஓ. எக்ஸ். பெர்னுண்டோ 10-00, மிசெஸ் வில்லவராயன் 3-00—கல்கமுவா: வி. சந்தியாப்பிள்ளை 2-00, ரி. ஜேற்றூட் 1-00, எஸ். வஸ்தியாம்பிள்ளை 1-00, மேரி ஸ்ரெல்லா பீரிஸ் 1-00, ஆசியா -50 — சூராவத்தை: எஸ். ஆசீர்வாதம் 3-00—முள்ளிக்குளம்: ரி. மோசேஸ் 2-00, வி. வி. வாஸ் 3-25 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 10-00 — கொச்சிக்கடை: என். ஜே. டைசன் 5-00, எஸ். கந்தையா 2-00 — அடம்பன்: ஏ. ஞேசலின் 5-00 — பண்டாரவளை: பி. சூசைமேரி 7-00 — சுன்ஞகம்: கே. ஏ. பொன்னையா 14-00—கட்டைக்காடு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00—நாவற்காடு: ஏ. அந்தோனிப்பிள்ளை 1-00 — பாலையூர்: ரி. பறுஞந்து 3-50 — சிங்கப்பூர்: எம்.ஏ. பெஞ்சமின் 20-00—மாம்புரி: ஜே. டி. அல்மேதா 10-00—ருகமம்: ஏ. சின்னப்பன் 2-00 — நேரியகுளம்: எம். பிலோமினம்மா 2-00 — இளவாலை: ஏ. அன்னம்மா 1-00, ஜி. எம். லூர்து -50 — புத்தளம்: மிஸ் ஏ. புஷ்பராணி 6-00 — கல்பிற்றி: எஸ். பி. ரோயிஸ் 7-50 — தும்பளை: எம். எஸ். சவிரிமுத்து 3-00 — வுலுலோற்ற: ஏ றெட்ணம் 2-00 — உசன்: பி. ஜே. சிறில் 2-00 — பண்டத்தரிப்பு: சூசைப்பிள்ளை 5-00 — மலாயா: எஸ். யோசவ் 6-60 — முல்லைத்தீவு: எஸ். எம். இளையதம்பி 2-00 — எத்தாலை: பிரூங் அன்ரன் 3-00 — மடுரோட் எம். சங்கரப்பிள்ளை 5-00—ஓயா: ரி. ஏ. குருஸ் 4-00 — எட்டியாந்தோட்டை: மேரியம்மாள் 5-00 — வின்டிலா: வி. ஈ. சி. செல்வம் 5-00 — டன்கொற்றுவா: மிசெஸ் எம். என். மிரூண்டா 6-00 — பேசாலை: எம். ஆர். லம்பேட் 2-50 — முள்ளியவளை: எஸ். இம்மனுவேல் 4-00 — மன்னுர்: மிசெஸ் ஈ. சி. அரசரட்ணம் 3-00 — கருக்குப்பனை: ஏ. எவ். மிரூண்டா 2-00 தலவாக்கலை: ஏ. பி. சிங்கராயர் 50-00—மாம்புரி: டபிள்யு. எம். பெர்னுண்டோ திசுப்பனை: மிசெஸ் பர்ணபாஸ் 2-00 — மானிப்பாய்: வி அந்தோனிப்பிள்ளை 2-00 — பருத்தித்துறை: ஏ. முருகேசு 10-00, எம். அருளப்பு 3-00, ஜி. எம். அருளப்பு 5-00 — குருஞகல்: ஜி. எஸ். சின்னத்துரை 4-00. ஏ. பி. மிராண்டிஸ் 4-00, பி. எம். சந்திரசேகரா 3-00.

| | |
|---|---|
| The Director,<br>St. Joseph's<br>Conference<br>Bishop's House<br>JAFFNA. | சென வின்சென்ற் டி போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன மாளிகை,<br>யாழ்ப்பாணம். |

---

## பாத்திமா சமாதானப் படையணி

லண்டன் நகரிலே ஹைட்பாக்கத்தில் உலகசமாதானத்துக்கும், ருஷியாவின் மனந்திரும்புதலுக்கும், இங்கிலாந்து மறுபடியும் கத்தோலிக்க சமயத்துக்குத் திரும்புவதற்குமாகத் திரு. அல்பேட் ரேச்என்பவர் பாத்திமா செபமாலைப்படையணிஒன்றைத் தலைமைதாங்கி நடத்திவருகின்ருர். இந்தப் படையணியில் சேர்ந்துகொள்வாரின்தொகைவாரந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. நாள்தோறும் காலையிலே திரு. ரேச் அவர்கள் அங்கு டவுணிங்வீதியிலே பெத்லஹேமிலிருந்துமாத்திரம் வருகின்ற சமாதானத்திற்காகப் பாவடிவமாக ஓர்செபத்தைச் சொல்லிவரக் காணப்படுகின்ருர். இவர் அங்குள்ள சிறைச்சாலைகளின் வெளியில்நின்று செபமாலைசொல்லும்போது அவற்றிலுள்ள கத்தோலிக்க மறியற்காரர் சன்னல்கள் முன்பாகநின்று அவருடன் சேர்ந்து செபமாலைசொல்லுகின்ருர்கள். அவர் செபமாலைசொல்லத் தொடங்கும்போது சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களைச் சன்னலண்டைபோக அனுமதித்து விடுகின்ருர்கள்.

---

# மாணவர் சரித்திரக்காட்சி

மாணவர்களின் சரித்திரபாடத் திட்டத்துக்கேற்க "மாணவர் சரித்திரக்காட்சி" என்னும் சரித்திரபாட வரிசைநூல்கள் வெளிவந்திருக்கின்றன. இக்காலத்துக்கேற்ற புதியமுறையில் — எளியநடையில் — திருப்தியளிக்கும்வகையில் அமைந்த சிறந்தபாட நூல்கள். மாணவர்களுக்குக் கவர்ச்சியளித்து அறிவூட்டத்தக்க அரியநூல்கள். ஆசிரியர்களுக்கும் அருந்துணையானவை. "இலங்கையும், உலகமும்" பற்றியவிடயங்கள் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளன.

ஆக்கியோன்: **வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை**

| | |
|---|---|
| 6–ம் வகுப்புக்குரியது | 2–00 |
| 7–ம் வகுப்புக்குரியது | 2–25 |
| 8–ம் வகுப்புக்குரியது | 3–00 |

**கிடைக்குமிடங்கள்:**

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,** வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.

**சஞ் சூசையப்பர் அச்சகம்,** பெரியதெரு, யாழ்ப்பாணம்.

---

## வடமத்தியமாகாணமும், வேளாண்மையும்

விவசாயத்தையே முக்கியமான தொழிலாகக்கொண்டுள்ள வடமத்திய மாகாணத்தில் மழையின்மையால்கிராமப்பகுதிகளிலுள்ள மக்கள் பெரிதும் கவலைகொண்டுள்ளார்கள். அம்மாகாணத்திலே சிலகுளங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. அதனுல் வேளாண்மை பாதிக்கப்படும் போல் இருக்கிறது.

---

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 31-ந்தேதி சனிவாரம் பி. ப. 4 மணியளவில், அர்ச். சூசையப்பர்சிற்றுலயத்தில் நடைபெறும். பகுதித்தலைவர்கள் சங்கம் 3-30 மணிக்கு நடைபெறுமாதலால் தயவுசெய்து நேரகாலத்தோடு சமுகமாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள் மேலும், டேவிட்ரோட்டில் வசிக்கும் எமது சகோதரி பெயாற்றிஸ் யோசேப் இம் தி 17-ந் தேதி கொழும்பில் காலஞ்சென்றுவிட்டா. ஆகையால், கூட்ட ஒழுங்குப் பிரகாரம் சகோதரரெல்லோரும் அவவுடைய ஆன்மஇளைப்பாற்றிக்காகத் திவ்விய பூசைகண்டு, தேவநற்கருணைபெற்று ஒப்புக்கொடுப்பதுமன்றி, ஓர் செபமாலையும் சொல்லத் தவருதிருப்பார்களாக.

A. S. FRANCIS OF MARY
சபைக்கர்த்தருக்காக

---

## நன்றித் துதி

**மசனட் ஆண்டவரின் புதுமை**

1957-ம் ஆண்டின் பெருமழைக்கு எங்கள் வீட்டுச் சுவர்கள் வெடித்து இருந்தபடியால் அதில் வசிக்கிறது ஆபத்து என்று எண்ணி, அதை இடித்துப் புதுவீடு ஒன்று கட்டத் தீர்மானித்தேன். ஆனுல், கையில் இருந்தபணமோ சொற்பமாயிருந்தது.

ஒருமுறை கனடா தேசத்தில் ஒருமடத்தில் 47 கன்னியாஸ்திரிகள் பசியாற, அங்கிருந்த 2 ரொட்டித்துண்டுகள் போதாமையுாயிருந்தபடியால், சிரேஷ்ட தாயாரின் கட்டளைப்படி, "மசனட்" ஆண்டவரை வேண்டிக்கொண்டதும் ஏராளமான ரொட்டித்துண்டுகள் பலுகச்செய்த புதுமை என் ஞாபகத்திற்கு வந்தது.

அப்போது, என்னிடத்தில் இருந்த சொற்ப பணத்தை "மசனட்" ஆண்டவரின் படத்துடன் ஒருபையில் போட்டு அவரே, வீடுகட்டிமுடியுமட்டும் பணம் குறையாமல் இருக்கச்செய்வார் என்று நம்பிக்கையாயிருந்தேன். அதுவுமன்றி, 'மசனட்' என்ற நாமத்தையே என் இல்லத்தின் பெயராகக் கடந்த இருபத்தைந்து வருடங்களாகப் பாவித்து வந்தேன். புதுவீட்டில் அந்நாமத்தைப் பிரபலியமாகப்பாவிப்பேன் என்றும் வாக்குப் பண்ணியிருந்தேன். வீடுகட்ட ஆரம்பித்ததும், ஆச்சரியத்துக்குரியவிதமாய்த் தேவையான பணம்வந்து சேர்ந்து, வீடும் அழகாய்முடிந்தது.

மசனட் ஆண்டவர் எங்கும் புகழப்பட்டு, விரைவில் அர்ச்சியசிஷ்ட பட்டம் பெறுவாராக!

— ஓர் பக்தன்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2283

காரைநகர்
காசிநாதர் கந்தையா கனகசபை
— வழக்காளி

எதிராக
சிவப்பிரகாசம் ரோட்,
வண்ணுர்பண்ணை வடமேற்கு
சரவணமுத்து கதிர்வேலு
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2283-ம இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1959-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 28-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1915-ம், 20-6-58 தொடக்கம், 6-11-58 வரைக்கும் ரூபா 1000-க்கு 12% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 176 சதம் 30.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வண்ணுர்பண்ணை கோயிற்பற்று, வண்ணுர்பண்ணை தென்மேற்கு இறை "நறுவிலியடி". கிழக்கே இருக்கும் பெரிய ஒழுங்கையிலிருந்து இக்காணியின் வடக்கெல்லையருகாக, வடமேற்கேயிருக்கும் கிணற்றிற்குப்போகும் ஆறுஅடி அகலமான கை ஒழுங்கை நிலம் உட்பட நிலப்பரப்பு இரண்டு (2.) எல்லை: கிழக்கு—கந்தையா நல்லையா ஆச்சாரியின் ஆதனம். வடக்கு—நாகமுத்து கைம்பெண் கனகத்துக்கும், மக்கள் இராசதுரைக்கும், மணிக்கும் உரிய ஆதனமும், சின்னத்தம்பி சுப்பிரமணியம் பெண் கமலாம்பாளின் ஆதனமும். தெற்கு—K. சிவபிரகாசம் கைம்பெண் நாகம்மாவின் ஆதனம்.

இதில் கிழக்கெல்லைக் காணிக்காரர் மேற்குறித்த கைஒழுங்கை ஊடாகக் கிணற்றில் தண்ணீர் அள்ளப் போக்குவரத்துச்செய்யும் உரித்து பிறநீங்கலாக மிகுதி அடங்கலு, அதற்குச் சேர்ந்தவைகளும்.

இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் D. $\frac{201}{86}$ இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 22-1959.